பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 22 ஞாயிற்றுக்கிழமை (05~05~2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:161

## பௌத்த மதத் தலைவர்களுக்குக் கடிதம்

# உடன்படிக்கையினால் நாட்டுக்கு பேராபத்து என்கிறார் ஜனாதிபதி

## இறைமையைக் காப்பாற்றுவதற்காக முழு அதிகாரத்தையும் பிரயோகிப்பாராம்

கொழும்பு,மே5

**அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டினால் நாட்டுக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது என. ஜனாதிபதி அஞ்சுகின்றார். எனவே நாட்டையும் அதன் இறைமையையும் காப்பாற்றுவதற்காக தமக்குள்ள முழு அதிகாரங்களையும் பயன்படுத்த அவர் முடிவு செய்திருக்கின்றார்.**

**பௌத்த மதத் தலைவர்களுக்கு தாம் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக அறிக்கை ஒன்று தெரிவித்தது.**

பௌத்த பீடாதிபதிகளுக்கு தாம் எழுதிய கடிதத்தில் -

"புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள சில நிபந்தனைகள் நாட்டின் பாதுகாப்புக்கு பேராபத்துத் தரக் கூடியவை" - என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக அறிக்கை தெரிவித்தது.

நாட்டின் இறைமையையும் மக்களையும் காப்பதற்கு நாட்டின் தலைவி என்ற முறையில் மட்டுமல்லாமல் முப்படைகளின் தளபதி என்ற வகையிலும் தன்னால் இயன்ற சகல நடவடிக்கைகளையும் எடுக்கப்போவதாக ஜனாதிபதி இந்தக் கடிதத்தில் உறுதியளித்திருக்கின்றார் என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து ஜெயலலிதாவுடன் பேசமாட்டேன்

### ரணில் கூறியதாகத் தகவல்

கொழும்பு,மே5

"விரைவில் இந்தியா செல்வேன். அப்போது தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசுவேன். ஆனால் அந்தச் சந்திப்பின் போது, தற்போது இங்கு (இலங்கையில்) இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகள் குறித்து அவருடன் உரையாடமாட்டேன்"

- இப்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பதாக அறியவருகின்றது.

உலக பத்திரிகைச் சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவத்தில் பிரதமர் உரையாற்றினார். அந்த நிகழ்வின் இடைவேளையின்போது, சில செய்தியாளர்களுடன் பிரதமர் தனிப்பட்ட முறையில் உரையாடினார். அப்போதே அவர் இத்தகவலை வெளியிட்டதாக அறியவந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி தமிழ்க் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு

### வழங்கவேண்டுமென கலந்துரையாடலில் தீர்மானம்

கொழும்பு,மே5

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் -

தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகளையும் உடனடியாக பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுவிக்க வேண்டும் -

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று நேற்று முன்தினம் தமிழ் மற்றும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலில் எடுக்கப்பட்டது.

மனித உரிமைகளுக்கான அபிவிருத்தி நிலையம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரவிராஜ் எம்பி, விநாயகமூர்த்தி எம்பி, ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா, தமிழ்க் காங்கிரஸ் செயலர் குமரகுருபரன், புளொட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் பிரதிநிதிகள் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

வவுனியா,மே5

வடக்கில் முஸ்லிம்களின் மீள் குடியமர்வு தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் பகல் 11.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சுமார் ஒன்றரை மணி நேரம் அது நீடித்தது.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டதாவது:-

யாழ்.குடாநாட்டில் உள்ள எமது வீடுகள், சொத்துக்கள் என்பன 1996 ஆம் ஆண்டின் பின்னர் படையினராலும் அவர்களுடன் சேர்ந்து செயற்படும் மக்களாலும் சூறையாடப்பட்டுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சிகளுக்கு எதிராக

## பேரியல், அனுரா, தினேஷ் விரைவில் இந்தியா விஜயம்

கொழும்பு,மே5

விடுதலைப் புலிகளுடனான அரசின் சமாதான முயற்சிகளை தீவிரமாக எதிர்த்து வரும் தென்னிலங்கை அரசியல் பிரமுகர்கள் குழு அடுத்த வாரமளவில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கின்றது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியான பேரியல் அஷ்ரப், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர் அனுரா பண்டாரநாயக்க, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா ஆகியோரே இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர்.

இவர்கள் மூவரும் பிரதான எதிர்க்

(12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலி உறுப்பினர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்

வவுனியா,மே5

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்காகச் சென்ற விடுதலைப் புலிகளின் 4 உறுப்பினர்கள் இராணுவத்தினரால் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

கற்கடங்குக்குளம் சோதனைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த மீறலா? மறுக்கிறது ஈ.பி.டி.பி.!

யாழ்ப்பாணம்,மே5

'கடற்படைப் புலனாய்வுப் பிரிவுடன் சேர்ந்து ஈ.பி.டி.பியினர் தீவகத்தில் யுத்தநிறுத்த மீறல் - கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் நேற்று முறையீடு' - என்ற தலைப்பில் நேற்று உதயனில் வெளியான செய்திக்கு ஈ.பி.டி.பி. சார்பில் மறுப்பு அறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

'ஈ.பி.டி.பியின் பணிகள் பற்றி மக்கள் நன்கறிவர்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவகப் பகுதிகளில் ஈ.பி.டி.பி. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்கியிருந்து பணிபுரிந்து வருகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### வாகரைத் தாக்குதலில்

## தப்பிய 34 மீனவர்களும் சொந்த இடம் திரும்பினர்

மட்டக்களப்பு,மே5

கடந்த புதன்கிழமை வாகரை மீனவர்கள் மீது கடற்படையினர் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவத்தில் உயிர்தப்பி, விடுதலைப் புலிகளின் பகுதியில் கரை யொதுங்கிய 34 சிங்கள மற்றும் முஸ்லிம் மீனவர்களும் நேற்றுத் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கடந்த 3 தினங்களாக இவர்கள் விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் வைக்கப்பட்டிருந்தனர். கடலில் கடற்படையினரின் நடமாட்டம் அதிகமாக உள்ளதால் கடல்வழியாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல மீனவர்கள் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இதுகுறித்து மட்டக்களப்பு மாவட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினருக்கு எதிராக மூதூரில் நேற்று ஹர்த்தால்

### ஆர்ப்பாட்டப் பேரணிகளும் இடம்பெற்றன

திருகோணமலை,மே5

கடந்த வாரம் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நிலாவெளி மற்றும் கோபாலபுரம் கிராமங்களில் இருவர் காயமடைந்த சம்பவத்தைக் கண்டித்து நேற்று மூதூரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நிலாவெளி மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் தெற்கு, மூதூர் கிழக்கு ஆகிய பகுதிகளில் கண்டனப் பேரணிகளும் இடம்பெற்றன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் பேரணிகளில் கலந்துகொண்டனர்.

மூதூர் கிழக்கில் நடைபெற்ற பேரணியில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பிரமுகர்களான ரூபன், தங்கன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மூதூர் தெற்குப் பகுதியில் இடம்பெற்ற பேரணி கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, பச்சனூர் பகுதிகளின் ஊடாக பட்டித்திடல் மைதானத்தை சென்றடைந்தது. அங்கு கண்டனக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

பேரணிகளின் முடிவில் கண்காணிப்புக் குழுவினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேசமயம் -

நிலாவெளி துப்பாக்கிச் சூடு மற்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பயங்கரவாதச் சட்டத்தை ஜே.வி.பி. எதிர்க்காதது கவலை அளிக்கின்றது

## பத்தேகம தேரர் எம்.பி. கருத்து

கொழும்பு,மே5

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் முன்னைய காலங்களில் ஜே.வி.பியினரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தற்போது அவர்களில் பல பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஆனால், அவர்களில் எவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று குரல் கொடுக்கவில்லை. மௌனமாக இருக்கிறார்கள். இது கவலைக்குரிய விடயமாகும்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரான பத்தேகம தேரர் தெரிவித்துள்ளார். அரசியல் கைதிகளின இன்றைய நிலை, பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவை பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் கொள்ளுப்பிட்டியில் உள்ள ரேணுகா ஹோட்டலில் நடைபெற்றது.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது. அங்கு பேசியபோதே பத்தேகம [illegible] குறிப்பிட்டார்.

கலந்[illegible] யாழ. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் பேசுகையில் -

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் வரலாறு, அந்தச் சட்டத்தால் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி விவரமாக எடுத்துக்கூறினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் 2-3 வருடங்களாக சிறைகளிலே இருந்து தண்டனை அனுபவித்துவிட்டார்கள். எனவே அவர்களை விடுவிக்க நாம் முன்வரவேண்டும். இதில் கட்சி பேதம் பார்க்கக்கூடாது. பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் மனித உரிமை மீறல்களைக் குறைக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் தலைவர் டி.டபிள்யூ. அமரக்கோன் கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கினார்.

ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான விநாயகமூர்த்தி, மனோ கணேசன், தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குமரகுருபரன், ஈ.பி.டி.பி. சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா உட்பட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம)

# ஊடகச் சுதந்திரம் பாதுகாக்கப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,மே5

இலங்கையில் ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேலும் உறுதி செய்யப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பவற்றின் செயற்பாடுகள் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஒழிக்கப்படவிருந்தன. ஆனால் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது அதனைத் தடுக்க நடவடிக்கை எடுத்தேன்.

தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றும் நோககுடனும் ஊடகச் சுதந்திரத்தை வருத்தி செய்யும் நடவடிக்கைகளைத் தற்போது மேற்கொண்டு வருகின்றேன்.

அரச ஊடகங்களிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அவை நஷ்டத்தில் இயங்கி னாலும் அவற்றைத் தொடர்ந்தும் இயக்குவதறகு நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-12-4)

# பனங்கூழ் அருந்துவதில் தென்பகுதி மக்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,மே5

பனை அபிவிருத்திச் சபையினால் விற்பனை செய்யப்பட்டு வரும் பனங்கூழைப் பருகுவதற்கு தென் பகுதியில் இருந்து வரும் மக்களும் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வாரத்தில் 3 தினங்கள் அதாவது புதன், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் கூழ் விற்பனை செய்யபடுகின்ற போதும் இந்த 3 தினங்களிலும் தென்பகுதி மக்கள் அதிகளவில் வந்து கூழ் பருகி வருகின்றனர்.

அவர்கள் தம்முடன் கூழை வாங்கிச் செல்வதையும் காணமுடிகிறது.

பனை அபிவிருத்திச் சபையால மரக்கறிக் கூழ் 20 ரூபாவுக்கும், மச்சக் கூழ் 30 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

(ம-10-8)

# குடாநாட்டில் நேற்று அனர்த்தம்

# திடீரென வீசிய கடுங்காற்றினால் மரங்கள் வீழ்ந்து வீடுகள் சேதம்

## பலர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், மே5

**யாழ்.குடாநாட்டில் நேற்று திடீரென கடுங்காற்று வீசியது. இதனால் பல இடங்களில் பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.**

**வீடுகளின் மேலும், ஆள்களின் மேலும் மரங்கள் வீழ்ந்ததால் பலர் காயமடைந்தனர். கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன. வாழைத்தோட்டங்கள் பலவற்றில் வாழைகள் முறிந்து சேதமாகின.**

திருநெல்வேலி, பாரதிபுரத்தில் பனைமரம் முறிந்து வீழ்ந்தபோது அதற்குள் அகப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் தர்மராசா(வயது 35) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே காயமடைந்தவராவார்.

வீட்டு வளவில் நின்று கொண்டிருந்தபோது பனைமரம் முறிந்து இவர் மீது வீழ்ந்ததால் கழுத்துப் பகுதியிலும் கைகளிலும் படுகாயமடைந்தார். தற்பொழுது இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் கிழக்கில் பனைமரம் ஒன்று முறிந்து வீட்டின் மேல் வீழ்ந்ததினால் வீடு பலத்த சேதமடைந்தது. அச்சமயம் வீட்டில் இருந்தவர்களான பஞ்சபாலன் கோபி(வயது 12), இவரது சகோதரி பஞ்சபாலன் ஜீவராணி(வயது14) ஆகிய இருவர் காயமடைந்தனர்.

சமைத்துக்கொண்டிருந்த இவர்களது தாயார் அவ்வேளை கோடரி வாங்குவதற்காக அயல் வீட்டுக்குச் சென்றிருந்ததால் தெய்வாதீனமாகக் காயம் ஏதும் இன்றி தப்பித்துக் கொண்டார்.

ஏழாலைப் பகுதியில் தண்ணீர் தாங்கி ஒன்றின் மீது போடப்பட்டிருந்த தகரம் தூக்கி வீசப்பட்டபோது தகரத்தின் மீது சுமைக்காக வைக்கப்பட்டிருந்த மரக்குற்றி அருகில் கிணற்றினைத் துப்புரவு செய்து கொண்டிருந்த இளைஞனான கனகலிங்கம் திவ்வியன் (வயது16) என்பவர் மேல் வீழ்ந்ததில் அவர் தலையில் படுகாயமடைந்தார்.

இப்பகுதியில் கடும் காற்றினால் வாழைகள் பல குலைகளுடன் முறிந்து நாசமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலியின் மற்றொரு பகுதியில் பனைமரம் ஒன்று முறிந்து அருகில் இருந்த வீடொன்றின் மேல் வீழ்ந்ததால் வீடு பலத்த சேதமடைந்தது. அப்பகுதியில் பல தென்னை மரங்களும் முறிந்து வீழ்ந்தன. இதனால் நால்வர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களின் மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

(ம-15-10-72)

# இரு வேறு விபத்துகளில் ஐவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம்,மே.5

பரந்தன் சந்தியில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்ற இரு மோட்டார் சைக்கிள்களுக்கிடையிலான விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

அச்சுவேலி பத்தமேனியில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டவர்களின் மோட்டார் சைக்கிளே, மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் பத்தமேனியைச் சேர்ந்தவர்களான தம்பையா செல்வநாயகம் (வயது57), செல்வராசா தர்மபாஸ்கரன் (வயது 36) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளான மற்றைய மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரும் காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

மானிப்பாயில் இரண்டு சைக்கிள்களுக்கிடையில் இடம்பெற்ற விபத்தில் சைக்கிள்களை ஓட்டிச் சென்ற இருவரும் காயமடைந்தனர்.

இவர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடுள்ளனர். (ம-15)

# இலங்கைப் பொருளாதாரத்தின் மிகவும் மோசமான ஆண்டு 2001

## மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு,மே5

இலங்கை கடந்த ஆண்டு மிக மோசமான பொருளாதாரப் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளதாக மத்திய வங்கி தனது ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இவ்வளவு மோசமான பொருளாதாரப் பாதிப்பைச் சந்தித்தது இதுவே முதற்றடவை என்றும் அது கூறியுள்ளது.

கடந்த ஆண்டில் பொருளாதாரம் 1.4 வீதத்தால் வீழ்ச்சி அடைந்தது.

கட்டுநாயக்கா விமான நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய மிகப் பெரும் தாக்குதல், நாட்டில் நிலவிய அதிக வெப்பநிலை, வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவே கடந்த ஆண்டு பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்.

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11இல் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலும் இலங்கைப் பொருளாதாரத்தில் குறிப்பிட்டளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

பொருளாதாரம் குறித்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மீள்பரிசீலனைகள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்.

- இவ்வாறு மத்திய வங்கியின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் 3.7 வீதத்தால் வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அது தெரிவித்துள்ளது. (ம)

# யாழ்ப்பாணம் - கொழும்பு இடையில் மற்றொரு தனியார் விமான சேவை

## தினசரி இருதடவைகள் 100 பயணிகள் செல்லலாம்

கொழும்பு,மே5

'எக்ஸ்போ ஏவியேஷன்' என்ற தனியார் நிறுவனம் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் விரைவில் பயணிகள் விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சர்வதேச விமான சேவையில் அனுபவமுள்ள 'எக்ஸ்போ ஏவியேஷன்' நிறுவனம் தனது புதிய சேவைக்கென 'IL-18' ரக பயணிகள் விமானம் ஒன்றைத் தருவித்துள்ளது. இதில் சுமார் 100 பயணிகள் பயணம் செய்யலாம். ஆரம்பகட்டமாக தினசரி காலையும் மாலையும் இரண்டு சேவைகள் நடத்தப்படும்.



இந்த சேவையில் 92 ஆசனங்கள் சாதாரண தர ஆசனங்களாகவும் 8 ஆசனங்கள் வசதிகள் கூடிய உயர்தர ஆசனங்களாகவும் இருக்கும் என இந்நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சப்ரி மரிக்கார் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மற்றும் உள்ளூர் விமான சேவைகளில் நன்கு அனுபவம் வாய்ந்த விமான சேவை ஊழியர்கள் இதற்கென ஏற்கனவே சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். 50நிமிட இந்த விமான சேவையில் பயணிகளுக்கு சிற்றுண்டியும் பரிமாறப்படும். பயணிகள் சேவைக்கென சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் இறுதிக்கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனம் விரைவில் தனது சேவைகளை ஆரம்பிக்கும்.

'எக்ஸ்போ ஏவியேஷன்' நிறுவனம் தற்போது குத்தகைக்குப் பெறப்பட்ட 'IL-18' ரக விமானம் ஒன்றையும் கம்பனிக்குச் சொந்தமான 'AN-12 ரக விமானம் ஒன்றையும் தூர கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மாலைதீவு, திருவனந்தபுரம், சென்னை, துபாய், லாகூர், கராச்சி, பாங்கொக், டாக்கா ஆகிய நகரங்களுக்கும் சரக்குகளைக் கொண்டுசெல்லும் சேவையில் ஈடுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கண்ணிகளை அகற்றும் ஒப்பந்தத்தில் இலங்கை - அமெரிக்கா கைச்சாத்து!

கொழும்பு,மே5

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் பாதுகாப்பு அமைச்சும் அமெரிக்காவும் கைச்சாத்திட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் ஆகியோர் நேற்றுமுன்தினம் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாக மேலும் சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏதுவாகவே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் அமெரிக்க நிபுணர்கள் அடங்கிய 20பேர் கொண்ட குழு ஒன்று ஈடுபட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் இவர்கள் எதிர்கொள்ளக்கூடிய நிர்வாக, சட்டரீதியிலான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இந்த உடன்படிக்கை பெரிதும் உதவும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறப்பட்டது.

(ம)

# அமெரிக்காவை அதிரவைத்த தபால்பெட்டி வெடிகுண்டுகள்!

வாஷிங்ரன்,மே5

**அமெரிக்காவில் தபால் பெட்டிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குழாய் குண்டுகள்(Pipe Bombs) நேற்று வெடித்துச சிதறின. இதில் உயிரிச்சேதங்கள் ஏற்படாத போதிலும், தபால் ஊழியர்கள் உட்பட பலர் காயமடைந்தனர். இந்தக் குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து சில பகுதிகளில் தபால் சேவை தடைப்பட்டுள்ளது.**

அமெரிக்காவின் பின்தங்கிய பிரதேசங்களான லோவா மற்றும் இலிநொய்ஸ் ஆகிய பகுதிகளிலேயே தபால்பெட்டி வெடிகுண்டுகள் வெடித்தன. 'குழாய்க் குண்டு' ரகத்தைச் சேர்ந்த வெடிகுண்டுகள் தபால்பெட்டிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. தபால்களைச் சேகரிப்பதற்காகத் தபால் சேவைப் பணியாளர்கள் தபால்பெட்டிகளைத் திறந்த சமயத்தில் குண்டுகள் வெடிக்கும்படியாக அவை தயார்படுத்தப்பட்டிருந்ததாக அமெரிக்கப் புலனாய்வு நிறுவனம் எவ்.பி.ஐ. தெரிவித்தது.



அமெரிக்காவில் தபால்பெட்டி வெடிகுண்டு வெடித்த இடம் ஒன்றில் புலனாய்வு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

நேற்றுக் காலை பணியாளர்கள் தபால்பெட்டிகளைத் திறந்தபோது குண்டுகள் வெடித்தன. ஆயினும் அவற்றின் சக்தி குறைவாகவே இருந்ததால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. ஆயினும் தபால் பணியாளர்கள் உட்பட தபால்பெட்டியின் அருகே நின்றிருந்த சிலர் காயமடைந்தனர்.

சுமார் 6 தபால்பெட்டி வெடிகுண்டுகள் வெடித்ததை அடுத்து தபால் பெட்டிகளை நெருங்கவேண்டாம் என்று பகிரங்க அறிவித்தல் விடப்பட்டது. அதனால் சில இடங்களில் தபால் சேவைகள் தடைப்பட்டுள்ளன.

தபால் குண்டுகள் வைக்கப்பட்டிருந்த தபால்பெட்டிகளுக்குள் உள்ளூர் நிர்வாகத்தை கடுமையாக விமர்சிக்கும் பிரசுரங்களும் காணப்பட்டதாகவும் -

ஆகவே இது உள்ளூர் தீவிரவாதிகளின் செயலாக இருக்கும் என்று நம்புவதாகவும் -

எவ்.பி.ஐ. அதிகாரி ஜேம்ஸ் பக்னர் தெரிவித்தார்.

வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்த தபால்பெட்டி ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட தட்டெழுத்து செய்த கடிதத்தில் -

'தபால்பெட்டிகள் வெடிக்கின்றன. ஏன்? நீங்கள் வினாவினீர்களா? நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அரசு கட்டுப்படுத்தலாம். உங்களால் என்ன செய்யமுடியுமோ அதை அரசு கட்டுப்படுத்துகிறது. என்னால் முடிந்த; எனக்குத் தெரிந்த வழியில் உங்கள் கவனத்தை ஈர்க்கின்றேன். கவனத்தை ஈர்ப்போர் பலர் தமது வழியில் உள்ளனர்.

என்னால் ஒரு மனிதனை மட்டும் மாற்ற முடியும். ஆனால், வளங்கள் அதற்கேற்றதாக இல்லை.

பிரபலமான ஒரு மனிதனைக் கொன்று உலகின் கவனத்தை ஈர்ப்பது போன்று பிரபலமற்ற மனிதர்களை பெரும் எண்ணிக்கையில் கொன்று அதே அளவில் கவனத்தை ஈர்க்கமுடியும்'

## உலக அரங்கில்

- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அமெரிக்காவில், சமீபத்திய ஆண்டுகளில் பிறருடைய கவனத்தை தம்மீது ஈர்க்கும் எண்ணத்தில் வன்முறைகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## பங்களாதேஷில் பெரும் மழை!

டாக்கா,மே5

பங்களாதேஷின் கிழக்குப் பகுதியில் கடந்த சில நாள்களாக இடி, மின்னலுடன் பெய்த பலத்த புயல், மழை மற்றும் மின்னல் ஆகியவற்றுக்கு 25 பேர் பலியாகியுள்ளனர். சுமார் 25ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் வெள்ளத்தால் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

புயற்காற்று மற்றும் மழை வெள்ளத்தால் நிகழ்ந்த பல்வேறு அசம்பாவிதங்களில் 100 பேர்வரை காயமடைந்துள்ளனர். (ஒ)

## அல்கெய்டா போராளிகள் பிலிப்பைன்ஸில் கைது!

பிலிப்பைன்ஸில் அல்கெய்டா தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிலிப்பைன்ஸ் பொலீஸார் அறிவித்தனர்.

இவர்களை விசாரணைக்காக அமெரிக்காவிடம் ஒப்படைப்பதா, இல்லையா என்பது தொடர்பாக இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## துப்பாக்கிச் சமரில் பலஸ்தீனர் பலி!

பெத்தலஹேமின் 'நேட்டிவிட்டி' தேவாலய வளாகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் சுடப்பட்டு பலஸ்தீனர் ஒருவர் உயிரிழந்ததாக பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் கூறினர்.

## அயர்லாந்து ரயில் விபத்தில் 3பேர் காயம்!

அயர்லாந்தில் இடம்பெற்ற ரயில் விபத்தில் மூன்று பேர் காயமடைந்தனர்.

இது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## விண்வெளி உரையாடல்

ஜோகன்ஸ்பேர்க்,மே5

விண்வெளிச் சுற்றுலா மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்கக் கோடீஸ்வரர் மார்க் ஷட்டில் ஓர்த், தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுடன் 'வீடியோ கொன்பரன்ஸ்' முறையில் உரையாடினார். விண்வெளித் தகவல் தொடர்பில் ஒரு சோதனை முயற்சியாக இந்த உரையாடல் நடத்தப்பட்டது. (ஒ)

## ஆப்கான் மலைக் குகையில் வெடிபொருள்கள் மீட்பு!

காபூல்,மே5

ஆப்கானிஸ்தானில் 'ஒப்பரேஷன் சினைப்' என்ற பெயரில் தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகளைத் தேடி, பிரிட்டிஷ் கடற்படையினர் மேற்கொணடுள்ள இராணுவ நடவடிக்கையில் மலைக் குகை ஒன்றிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை தொடக்கப்பட்ட புதிய இராணுவ நடவடிக்கையில் முதற்றடவையாக வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் இராணுவம் தெரிவித்தது.

'கலஸ்னிகோவ்' ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் இரண்டாயிரம் தோட்டாக்களும் விமான எதிர்ப்புப் பீரங்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



ஆப்கானிஸ்தானின் வரண்ட மலைப் பகுதியில் நீரிழப்பால் பாதிக்கப்பட்ட பிரிட்டிஷ் படை வீரர் ஒருவருக்கு முதலுதவி வழங்கப்படும் காட்சி.

இதேசமயம், ஆப்கானில் கோடை காலம் ஆரம்பித்துவிட்டதாகவும் -

இதனால் வரண்ட மலைப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் அமெரிக்க, பிரிட்டிஷ் படையினருக்கு உடலில் நீரிழப்பு எற்படும் ஆபத்தை எதிர்நோக்குவதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## பிரெஞ்சு அதிபர் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்களிப்பு

பாரீஸ்,மே5

பிரெஞ்சு அதிபர் பதவிக்கான தேர்தலின் இரண்டாம் கட்டமும் இறுதியானதுமான வாக்களிப்பு இன்று நடைபெறுகிறது.

தற்போதைய அதிபர் ஜக்குவர் ஷிராக்கும் தேசிய முன்னணித் தலைவரும் வலதுசாரியுமான ஜீன் மரி லீ பென்னும் இத்தேர்தலில் வேட்பாளர்களாக உள்ளனர்.

தனது எதிர்ப் போட்டியாளர் லீ பென்னை தனிப்பட்ட விரோதியாகக் கருதுவதாக ஷிராக் இறுதி நேரப் பிரசாரக் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

இரண்டாவது கட்ட வாக்கெடுப்பில் தனக்கு எதிராக பாரிய அளவில் தேர்தல் மோசடிகள் இடம்பெறலாம் என்று அஞ்சுவதாக லீ பென் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இத்தேர்தலில் லீ பென் வெல்வது இனவாதக் கொள்கையை வளர்ப்பதாக அமைந்துவிடும் என்று பெரும்பாலான பிரெஞ்சு மக்கள் கருதுவதால் தற்போதைய அதிபர் ஷிராக்குக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் [illegible] ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இனவாதக் கொள்கையாளர் என்று அழைக்கப்படும் லீ பென் கடந்த மாதம் 27ஆம் திகதி நடந்த முதல் கட்ட வாக்கெடுப்பில் வென்றதைத் தொடர்ந்து அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்தன. லீ பென் தேர்தலில் வென்று அதிபரானால் பிரான்ஸில் குடியேற்றம் மற்றும் அகதிகள் தொடர்பான விதிமுறைகள் கடுமையாக்கப்படும் என்று கூறப்படுகிறது.

அரேபிய, ஆபிரிக்க நாட்டவர்களை அதிகளவில் கொண்டுள்ள பிரான்ஸின் உதைபந்தாட்ட தேசிய அணியை பிரெஞ்சு அணி என்று சொல்வது வெட்கக்கேடானது என்று லீ பென் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பங்களாதேஷ் ஆறு ஒன்றில் பயணிகள் படகு கவிழ்ந்தது!

## நூற்றுக்கணக்கானோர் பலியென அச்சம்!!

டாக்கா,மே5

பங்களாதேஷில் பயணிகள் படகு ஒன்று ஆற்றில் கவிழ்ந்ததில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு தென்கிழக்குத் துறைமுக நகரான சந்கூரில் மெஹ்னா ஆற்றில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அளவுக்கதிகமான பயணிகளை படகில் ஏற்றியதாலேயே படகு கவிழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

ஆற்றுப் படகுச் சேவைப் பொறுப்பாளர்கள் படகு கவிழ்ந்த சமயத்தில் அதில் 150 பேர் மட்டுமே இருந்ததாகக் கூறுகின்றனர்.

ஆனால், நீந்தி உயிர்தப்பிய பயணிகள் படகில் 300முதல் 400 பேர் வரை பயணித்ததாகத் தெரிவித்தனர்.

சுமார் 60 அடி ஆழமான ஆற்றில் படகு தலைகீழாகக் கவிழ்ந்ததாகவும் -

அதனால் படகுக்குள் சிக்கியவர்கள் உயிர் தப்ப வாய்ப்பில்லை என்றும் -

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், இரவில் காலநிலை சீரற்று இருந்ததால் எதிரே வந்த வேறு ஒரு கடற்கலத்துடன் மோதி படகு கவிழ்ந்திருக்க வாய்ப்புள்ளதாகவும் - படகில் இருந்தவர்களில் 70 பேர் வரை உயிர்தப்பிவிட்டதாகவும் - படகுச் சேவைக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஒரு குழந்தை மற்றும் ஒரு பெண்ணுடைய சடலங்களே நேற்றுப் பிற்பகல் வரை மீட்கப்பட்டிருந்தது.

சலாகுதீன் - 2 என்ற இந்தப படகு இரு தளங்களைக் கொண்டது. டாக்காவில் இருந்து கரையோரப் பிரதேசமான படுவக்காலி என்ற இடத்துக்கு சென்றுகொண்டிருந்த போதே அது விபத்துக்குள்ளானது.

கவிழ்ந்த படகில் பயணித்தவர்களின் உறவினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் சம்பவம் இடம்பெற்ற பகுதியில், பயணிகளில் எவராவது உயிருடன் மீட்கப்படக்கூடும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பு பெரும்பாலும் நிறைவேறாதென்றே மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர். (ஒ)



பங்களாதேஷில் அளவுக்கு அதிகமான பயணிகளுடன் செல்லும் படகு ஒன்று.

### பாலியல் வல்லுறவு தொடர்பாக

## நேபாள உயர் நீதிமன்றத்தின் பரபரப்பை ஏற்படுத்திய தீர்ப்பு

காத்மண்டு,மே5

பாலியல் பலாத்காரம் தொடர்பான வழக்கொன்றில் நேபாள உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு, இந்து நாடான நேபாளத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனது கணவன் தனது விருப்பத்துக்கு மாறாக தன்னுடன் உறவு கொண்டதாக மனைவி ஒருத்தி செய்த முறைப்பாடு மீதான வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேபாளம் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருப்பதாவது:-

'மனைவியின் அனுமதியின்றி கட்டாயப்படுத்தி கணவன் உறவு கொண்டாலும் அது பாலியல் பலாத்காரமாகவே கருதப்படவேண்டும் அதே போன்று விலைமாதாக இருந்தாலும் அவளது விருப்பத்துக்கு மாறாக உறவுகொள்வது குற்றமாகும்.

பாலியல் வல்லுறவுக் குற்றத்துக்கு இதுவரை 500 ருபா அபராதம் அல்லது 1 வருடச் சிறையே தண்டனையாக வழங்கப்பட்டது. இதனைக் கடுமையாக்கி, வல்லுறவுக் குற்றத்துக்கு 10 வருடங்கள் வரை சிறைத்தண்டனை வழங்கப்படும்.

பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படும் சமயத்தில் தன்னை பாதுகாத்துக்கொள்ள ஒரு பெண் கொலையும் செய்யலாம். வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட ஒரு மணித்தியாலத்துக்குள் வல்லுறவு புரிந்தவனைக் கொன்றாலும் அது குற்றமாகாது.

மேலும் ஒரு பெண்ணை வல்லுறவுக்கு ஆளாக்கியவனின் சொத்தில் பாதி பாதிப்படைந்த பெண்ணுக்கு சேரும்'

- இவ்வாறு நீதிமன்றம் கூறியது.

இத்தீர்ப்பை நேபாள நாடாளுமன்றம் மூலம் சட்டமாக்கும்படியும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

TECHNICS PIONEER SUNSUI ONKYO LO-D BOX வகைகளும் இவற்றிற்குரிய AMPLIFIER, PIONEER, JVC, AIWA, CD SET வகைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.சண்முகநாதன், முத்தட்டுமடம், K.K.S. வீதி, கோண்டாவில் மேற்கு. (3377)

மரத்தளபாடங்கள், அலுமாரி, மேசைகள், குஷன்செற்றி, இரும்புப் பெட்டகம், கடைகளுக்குரிய அலுமினிய கண்ணாடி சோக்கேஸ்கள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.216, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடிச் சந்தி அருகாக) (3422)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசா ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3293)

GREEN VALLY இன (விமானம் மூலம் தருவிக்கப்பட்ட) முதல் தரமான புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் கோழிகள் நியாய விலையில் கொள்முதலும் செய்யப் படும். தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (3426)

பிறவுண் வீதி, மிருகவைத்திய சாலைக்கு அண்மையில் BROILER, கல்பேட் இறைச்சிக் கோழிகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.18, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (3424)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக் குளம் முன்பாக, கட்டப்பிராய்.(3388)

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காட்டில் 3 1/4 பரப்புக் காணி, பெரிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜேஸ்வரி ஏரம்பு, முருகேசர் வளவு, முத்துமாரி அம்பாள் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (3442)

சுதுமலை கிழக்கில், அரசடி ஒழுங்கையில் மானிப்பாய் வீதிக்குச் சமீபமாக, 4 1/2 பரப்புக் காணிக்குள் அமைந்த சகல வசதிகளோடு நல்ல வருமானமும் கொண்ட நல்ல-வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ரதி கனகசபை, அரசடி ஒழுங்கை, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (3434)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்லின, பூச்சி நீக்கப்பட்ட (DASH HOUND) டாஸ்கவுன்ட் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70(34), கோவில் வீதி, யாழ்ப்பாணம். (3447)

40 நாள்கள் நிரம்பிய, பூச்சி நீக்கப்பட்ட நல்லின அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை.இரத்தினசபாபதி, 25/16, ஓடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (3421)

## தவறிவிட்டது

கீரிமலை நகுலேஸ்வரா வீதியைச சேர்ந்த சுப்பன் இராசமணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.742033025V), இராணுவ அடையாள அட்டை என்பன 28.04.2002 அன்று 782 இலக்க பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆனைகோட்டையில் உள்ள BLG கொமினிக்கேசனில் (T.P 2753) ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3446)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் (முட்டாஸ் கடை சந்திக்கு அருகில்) 12'X30' அளவு கொண்ட கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு:- இல.216, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (இலுப்பையடிச் சந்தி அருகாக). (3423)

## தேவை

யாழ்நகரப்பகுதியில் வசதியுடன் கூடிய கடை வாடகைக்குத் தேவை. தொடர்பு: ம.சுரேஸ், 54/12, ஆத்தி சூடி வீதி, கந்தர்மடம்.T.P. 021-3115 (3454)

## திருமண சேவை

மணமகனா? மணமகளா? உள்நாடா? வெளிநாடா? எத்தகைய மணமக்களானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். திரு.எம். பொன்னுத்துரை, ஹரேகிருஷ்ணா திருமண சேவை, பெரியமதவடி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (3056)

## கல்வி

O/L கணிதத்தின் சகல அலகுகளும் ஆரம்ப அறிவிலிருந்து கற்பிக்கப்பட்டு மீட்டலுடன், வினா-விடை வகுப்புக்களும் 40 மணித்தியாலங்களில் 'A' பெறுபேறடைவதற்காக நிறைவேற்றப்படும். காலை 8.00-9.00 மணிக்குள் சந்திக்கவும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (3431)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம், பூரட்டாதி முதலாம்பாதம் 1967ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமற்ற கிரக பாவம்குறைந்த கனடா கணனிப் பொறியியலாளருக்கு படித்த மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும்.விளம்பர இல. 1506, C/oஉதயன், யாழ்ப்பாணம். (3458)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் உத்தராடம் முதலாம்பாதம் 1960ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமற்ற கொழும்பில் தனியார் ஸ்தாபனத்தில் ஒடிற் முகாமையாளராகவுள்ளவருக்கு (CIMA-III) மணமகன் தேவை. ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1507, C/o உதயன் யாழ்ப்பாணம் (3459)

# திருமலையில் கைதான இளைஞர்களுக்குப் பிணை

திருகோணமலை,மே5

தமிழக முதல்வர் ஜெயலலிதா எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களும் நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்ட நீதிவானால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

விடுதலையான இளைஞர்களில் ஒருவரான டி.பத்மசேகர் (28) தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவரது உடல் நிலை படிப்படியாகத் தேறி வருவதாக திருகோணமலை தள வைத்திய சாலை டாக்டர் வி. வாஸ்தேவ கூறினார்.

திருமலையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின்போது பொலீஸாருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின்போது இந்த நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. பொலிஸாரால் தாக்கப்பட்டு சுயநினை விழந்தபடி டி.பத்மசேகர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். (ஒ)

# சிவாஜிலிங்கம் எம்.பிக்கு வல்வையில் பாராட்டு விழா

வடமராட்சி, மே5

"இலட்சியப் பிடிப்புடன் சமூக சேவைப் பணிகளை சிறுவயதில் ஆரம்பித்து படிப்படியாக உயர்ந்து இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக உயர்ந்துள்ள சிவாஜிலிங்கத்தின் உழைப்பு பாராட்டுக்குரியதே."

- இவ்வாறு வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை மருத்துவப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கு நிகழ்ந்த பாராட்டுவிழாவில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சனசமூக நிலையம் ஒன்றின் தலைவராக பின்னர் செயலாளராக மக்கள் சேவையை இளம் வயதில் ஆரம்பித்த சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபையின் தலைவராக மக்களால் தெரிவு செய்யப்பட்டார்.நகரசபைத் தலைவராக அவர் இருந்த காலத்தில் அபிவிருத்திக்கு என அரசின் நிதி போதியளவு கிடைக்கவில்லை. ஆனாலும் தன் சக்திக்கு உட்பட்டவரை இயன்றளவுக்கு அபிவிருத்திப் பணிகளைச் செய்துள்ளார்.

தற்போது வல்வெட்டித்துறை நகரத்துக்கு அப்பால் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். தான் கடந்து வந்த சேவைகளுக்கு மேலாக யாழ். மாவட்ட மக்களுக்கு தனது சேவைகளைத் தாராளமாக வழங்குவார் என எதிர்பார்க்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-173)



## கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ சபரீஸ ஐயப்பன்ஆலய நூதன மூர்த்திகள் தெருவீதி உலா விஞ்ஞாபனம்

ஐயப்பன் அடியார்களே,

நிகழும் சித்திரபானு வருட சித்திரை மாதம் 23ஆம் நாள் 06-05-2002 திங்கட்கிழமை காலை 9.30மணிமுதல் ஊர்வலத்துக்கான வழிபாடுகள், பஜனைகள் நடைபெற்று பிரதான வீதிகள் வழியாக ஸ்ரீ சபரீஸ ஐயப்பன் ஆலய நூதன மூர்த்திகள் ஊர்வலமாக ஆலயத்துக்குக் கொண்டுவரப்படும்.

யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள S.V.M. வர்த்தக ஸ்தாபனத்தில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகும். இந்த விழாவில் குருமார்கள், பக்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு இந்த மூன்று நாள் நடைபெறும் ஊர்வலத்தைச் சிறப்பித்து உங்களால் இயன்ற நிதி உதவி, பொருள் உதவி, சரீர உதவி போன்ற உதவிகளை வழங்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*சாமியே சரணம் ஐயப்பா!*

சபரீஸ ஐயப்பன் ஆலய நிர்வாக சபை.

(3440)

*அனுசரணை:* சுவிஸ்ஸோ நகைத் தொழிலகம்.

## திருமண மண்டபமும் தங்குமிட வசதிகளும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடன், குறைந்த கட்டணத்தில், நிறைந்த சேவைபுரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...

ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No:89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo - 13
T.P.No. 01 - 433182, 472582

M.திலகவதி, ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (1243)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 - 09 - 1935

இறப்பு 05 - 11 - 1996

## திருமதி கமலாதேவி தியாகராஜா

*(Rasam Transports உரிமையாளர் மனைவி)*

அன்னையே நீர் எம்மை விட்டுப் பிரிந்து
ஆறு ஆண்டு என்ன அறுபது ஆண்டுகள்
சென்றாலும் நாம் இருக்கும் மட்டும்
உம் நினைவுகள் எம்முடன் இருக்கும்.

*உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*23, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

(3453)

# 31ஆம் நாள் தொடரும் நினைவலைகள்



## திருமதி மணி சிவசுப்பிரமணியம்

மண்ணில் மலர்ந்தது 25-10-1921

விண்ணில் விழித்தது 03-04-2002

குடும்ப வானில் உதித்து அன்பால், பண்பால், அறிவால்
ஒளி பாய்ச்சி மகிழ்விக்கும் வேளைதனில் காலத்திரை
கடுகதியாய் வந்து விழுந்ததென்ன...?
தரணிதனில் பாரம் சுமந்தது போதுமென
பாபா களி கூர அழைத்தாரோ?

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.
சாந்தி பெறுக! எங்களுக்கும் சாந்தி தருக!

தகவல்:
திருமதி பத்மலோஜினி ரகு
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி யாழ்ப்பாணம்.)
*லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.*

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(3457)

# மரண அறிவித்தல்

## திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை

(பிள்ளை முத்து)

குருநகரைச் சேர்ந்த திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை (பிள்ளை முத்து) 02.05.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அவுறான் - தங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பெனடிற் றெஜினா, காலஞ்சென்ற அவுறான் அல்போன்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரான்சிஸ் (புகையிரத நிலையம், திருகோணமலை), மரியதாஸ் (அரச மரக்கூட்டுத்தாபனம், நல்லூர்), சூசைதாசன், கிறிஸ்தோப்பர் (முன்னாள் ஆசிரியர், புனித ஜோசப் வித்தியாலயம்), அகஸ்ரின் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), வோல்டர் (ஜேர்மனி), இம்மனுவேல் (ஜேர்மனி), அன்ரனீற்றா ஆகியோரின் அருமைத் தாயாரும் பிரபாவதி (உயரப்புலம், ஆனைக்கோட்டை), லூர்த்து நாயகி டொறத்தி, மேசி டெய்சி (முன்னாள் ஆசிரியை, புனித சென். சாள்ஸ் வித்தியாலயம்), கிறசன்சியா (கிளி), ஸ்ரெபி (ஜேர்மனி), குமுதா (ஜேர்மனி), அன்ரனி (ஆசிரியர், புனித மரியாள் வித்தியாலயம்) ஆகி யோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2002) ஞாயிற்றுக் கிழமை பி.ப.4.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து புனித கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக் கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*117/2, பாங்சல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.*

தகவல்: பிள்ளைகள்.

(3456)

# உதயன்

## வாகரைத் தாக்குதல்

வாகரைக் கடலில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற - படகு வெடித்துச் சிதறிய - சம்பவம், அமைதியைத் தேடி தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தலாம் என்ற அச்சத்தைத் தோற்றுவித்திருக்கின்றது.

மீனவர் படகுகள் மீது தாக்குதலை நடத்திவிட்டு, 'விடுதலைப் புலிகளின் படகுகளை வழி மறித்தோம; அவற்றில் ஒன்று வெடித்துச் சிதறியது' என்று கடற்படையினர் கதைவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சம்பவத்தில் தப்பிய சிங்கள, முஸ்லிம் மீனவர்களின் தகவல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலேயே, சமாதான முயற்சிகளையும், ஒப்பந்த நடைமுறைகளையும் குழப்பும் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறலாம் என்றும் -

ஒப்பந்தம் சுமுகமாக நடைமுறைப்படுத்தப்படுவதையும் இரு இனங்களுக்குமிடையில் இணக்கம் ஏற்படுவதையும் விரும்பாத சில சந்திகள், ஒப்பந்தத்துக்கு வேட்டு வைக்க முயலலாம் என்றும் - எச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

அந்த வகையிலான ஒரு சம்பவமாகவே வாகரைக் கடற் தாக்குதல் நிகழ்வைக் கொள்ளவேண்டியிருக்கின்றது.

அதுவும், அது நிகழ்ந்த தற்போதைய அரசியல் சூழ்நிலை - பின்னணி - எண்ணிப் பார்க்கத்தக்கது.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து, அல்லது பிரதமர் ரணில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, புலிகளுடன் சமாதான முயற்சிகளை ஆரம்பித்ததிலிருந்து அந்த நடவடிக்கைகளுக்கு அவ்வப்போது எதிர்ப்புக் காட்டி - துள்ளிக் குதித்து - வந்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

எனினும், சமாதான முயற்சிகளுக்கு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கிடைத்து வந்த ஆதரவு மற்றும் அதனால் எழுந்த அழுத்தம் ஆகியவை காரணமாகத் தமது எதிர்ப்பை அவர் அடக்கி வாசிக்க வேண்டியிருந்ததையும் நாம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால், தற்போது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு வந்ததிலிருந்து அவரது போக்கில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பிரதமருக்குத் தெரியாமல் பாதுகாப்புக் கவுன்ஸிலை திடீரெனக் கூட்டுகின்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற முறையில் தனக்குள்ள வலுவைப் பயன்படுத்தி, படையினர் விடயங்களில் தலையிட்டு, தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகளை ஒரு கை பார்க்க அவர் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றார். பாதுகாப்பு வட்டாரங்கள் அவரது அதிகாரப் போக்கில் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் மிடுக்குக் குறித்து அச்சம் வெளியிட்டிருப்பதாகத் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. அரசியல் ரீதியாகவும் அமைதி முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் காய்நகர்த்தல்களை அவர் செய்து வருகின்றார்.

இதுவரை காலமும் அமைதி முயற்சிகள் தொடர்பாக இரண்டுங்கெட்டான் நிலையில் கருத்துத் தெரிவித்து வந்த அவரது கட்சி, இப்போது திடீரென 'வெட்டு ஒன்று துண்டு இரண்டான' நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ஐ.தே.க. அரசின் அமைதி முயற்சிகளுக்கான செயற்பாட்டை - போக்கை - காரசாரமாகக் கண்டித்து, அதற்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதினொரு பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

புலிகள் மீதான தடை நீக்க விவகாரம், இடைக்கால நிர்வாகம் ஆகியவை தற்போதைய அமைதி முயற்சிகளில் அடிப்படையான விடயங்கள். இவை தொடர்பாக ஐ.தே.க. அரசின் நிலைப்பாட்டை பகிரங்கமாக எதிர்க்க ஜனாதிபதியின் சுதந்திரக் கட்சி தயாராகி விட்டது.

இவ்வாறு அமைதி முயற்சிகளுக்கு எதிராக வியூகம் வகுத்து, பகிரங்கமாக அந்த முயற்சிகளை எதிர்த்து, அவற்றுக்கு வேட்டு வைக்கும் நிலைப்பாட்டை ஜனாதிபதி எடுத்ததற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

ஒன்று - தமது பிந்திய இந்திய விஜயத்தின் மூலம் அவருக்குக் கிடைத்த ஊக்கம் அல்லது தைரியம்.

இரண்டு - அவருக்குள்ள நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தை முடக்கவும், கட்சி ஊடாகத் தனது அணி எம்.பிக்கள் மீது அவர் வைத்திருக்கும் செல்வாக்கை - அதிகாரத்தை - உடைக்கவும் வகை செய்கின்ற அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவர ஐ.தே. கட்சி அரசு தயாராகி வருபமை.

இந்தச் சீர்திருத்தச் சட்டங்கள் இன்னும் 16 நாள்களில் நாடாளுமன்றத்துக்கு வருகின்றன. அவை திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டால், ஜனாதிபதி சந்திரிகாவின் அதிகாரப் பல், உத்தியோகபூர்வ ரீதியிலும் கட்சித் தலைவி என்ற ரீதியிலும் பிடுங்கப்பட்டு விடும்.

இதனால், எரிச்சலும் கோபமும் அடைந்திருக்கும் ஜனாதிபதி, 'அடங்கிப் போனது போதும; பொங்கி எழுவோம்' என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கலாம். அதன் விளைவே அவரது தற்போதைய சீற்றப் போக்குக்குக் காரணம் என்று கருத முடிகின்றது.

எது எப்படியென்றாலும், ஜனாதிபதியின் அத்தகைய போக்கின் பின்னணியில் இடம்பெற்ற ஒரு சம்பவமாகவே - புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு சாவு மணி அடிக்க முயலும ஒரு செயற்பாடாகவே - வாகரைத் தாக்குதலைக் கருத வேண்டியுள்ளது.

எனவே, இந்தத் தாக்குதல் குறித்து ஜனாதிபதியின் விசுவாசிகளான படை அதிகாரிகள், உலகுக்குக் காதில் பூச்சுற்றுவது போலத் தெரிவிக்கும் காரணங்களை ஒதுக்கி விட்டு, உண்மையைக் கண்டுபிடித்து, இனிமேலும் அத்தகைய சம்பவங்கள் நிகழாமல் உறுதிப்படுத்துவதும், தற்போதைய சம்பவத்தில் குற்றமிழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்டாயக் கடமையாகின்றது.

அமைதி முயற்சிகள் செவ்வனே தொடர இது அவசியமானதாகும்.

## யாழ்.கூட்டுறவு வங்கியை மீள ஆரம்பிக்கவேண்டும்

### கடனுதவிச் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

"யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் மிகச் சிறப்பாக இயங்கி மக்களுக்குச் சேவையாற்றி வந்த யாழ்ப்பாணக் கூட்டுறவு வங்கியை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும்". - இவ்வாறு சுன்னாகம் - மயிலணி சிக்கனக் கடனுதவிச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் கே.சின்னராசா தலைமையில் மயிலணியில் கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கி செயற்பட்டுவந்த வேளையில் கூட்டுறவாளர்கள், கைத்தொழிலாளர்கள், பல்வேறு வகைப்பட்ட தொழில் முயற்சியாளர்கள், உற்பத்தியாளர்கள் எனப் பலரும் நிதி உதவி பெற்று தமது தொழில்களை வெற்றிகரமாக நடத்திவந்தனர். அண்மைக் காலப் போர்ச் சூழ்நிலைகளால் யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கி செயலற்றுப் போய் விட்டது. எனவே, இவ்வங்கியை மீண்டும் ஆரம்பிப்பதன்மூலம் பலரும் நன்மை பெறமுடியுமாதலால் விரைவில் இவ்வங்கியை ஆரம் பிக்குமாறு கோருகின்றோம் என அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிக்கனக் கடனுதவிச் சங்கத்திற்கு மேலும் பல உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் எனவும் - எதிர்காலத்தில் தமது கிராம மக்களின் நலன்காக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் பல உருவாகி செயற்படுதல்வேண்டும் எனவும் -

கூட்டத்தில் மேலும் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-152)

## தேசியப்பட்டியலில் தெரிவான முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் விரைவில் மாற்றப்படலாம்

திருகோணமலை,மே5

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் மாற்றப்பட்டு அவர்களுக்குப் பதிலாக வேறு நபர்கள் நியமிக்கப்படலாம் என்று மேற்படி கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம்காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் சிலரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக்க வேண்டிய கட்டாயம் கட்சியின் தலைமைத்துவத்துக்கு ஏற்பட்டுள்ளதாகவும் -

இதன் அடிப்படையில் நிந்த ஹசன் அலி, கொழும்பு முஸம்மில், புத்தளம் பாயிஸ் ஆகியோர் தேசியப்பட்டியல் முறையில் அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் - நம்பப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸின் ஒருவரும், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டியிட்டதால் மூவருமாக மொத்தம் நால்வர் தேசியப்பட்டியல் உறுப்பினர்களாக ஸ்ரீல.மு.காங்கிரஸை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

இதன் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் விரைவில் மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ-290)

## பிரபாவை கைது செய்யக் கோரும்

# தமிழகச் சட்டப் பேரவையின் தீர்மானம் குறித்து கூட்டமைப்பு கவலை அடைகிறது

### ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கொழும்பு,மே5

தலைவர் பிரபாகரனை கைது செய்து இந்தியாவுக்கு கொண்டுவர இந்தியாவின் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் தீர்மானம் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பது குறித்து, தமிழர் விடுதலைக் கூட்டணியும், அது அங்கம் வகிக்கும் தமிழர் தேசியக் கூட்டமைப்பும் ஆழ்ந்த கவலையடைந்துள்ளன.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரபாகரனைக் கைது செய்யக்கோரும் தமிழக சட்ட சபையின் தீர்மானம் குறித்து விவாதிக்க தமிழர் விடுதலைக் கூட்டணியோ, தமிழர் தேசிய கூட்டமைப்போ இதுவரை ஒன்றுகூடவில்லை. ஆனாலும் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா தனது ஒத்துழைப்பை வழங்கும்படி தமிழக அரசும், அதன் மக்களும் நிர்பந்தித்தால் அவர் (ஜெயலலிதா) எதிர்ப்பின்றி விட்டுக்கொடுப்பார் என்பதே இரு அமைப்புகளினதும் கருத்தாகும்.

இலங்கைத் தமிழர்கள் கடந்த பல வருடங்களாகச் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்துள்ளார்கள். தற்போது ஏற்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பம் பேச்சுக்கள் மூலமான தீர்வுக்கு ஒரு சிறந்தவழி மட்டுமன்றி, இறுதியான சந்தர்ப்பமுமாகும்.

எனவே இலங்கையிள்ள தமிழரதும் இலங்கைக்கு வெளியே வாழும் தமிழர்களினதும் குறிப்பாக தமிழ்நாடு அரசினதும் ஒத்துழைப்பு சமாதான நடவடிக்கைக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும்

சமாதான நடவடிக்கைக்கு தமிழக அரசின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் நமக்கு இன்னும் நம்பிக்கை உள்ளது. அத்தோடு தமிழகம் எங்கள் தாய் வீடாக இருப்பதாலும், அது பாக்கு நீரிணைக்கு அப்பால் ஆக 28 மைல் தூரத்தில் மட்டுமே இருப்பதாலும், தமிழகத்துக்கு இலங்கையின் சமாதான நடவடிக்கைக்கு தார்மீக ரீதியாக அதிகபட்ச ஒத்துழைப்பினை வழங்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

தமிழக முதல்வருக்கு மட்டுமன்றி பாக்குநீரிணைக்கு அப்பக்கத்திலோ அல்லது இப்பக்கத்திலோ உள்ள எந்தவொரு அரசியல் தலைவருக்கும் மன வருத்தத்தை அல்லது சங்கடமான நிலையை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடாது தவிர்க்க வேண்டுமென்று எங்கள் அமைப்புக்களின் உறுப்பினர்களையும், நலன் விரும்பிகளையும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தியாவின் - குறிப்பாகத் தமிழகத்தின் ஒத்துழைப்பு ஈழத் தமிழர்களைப் பொறுத்தளவில் மிக மிக இன்றியமையாததாகும் மேலும், தமிழ்நாட்டில் அகதிகளாக இருக்கும் இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்களையும் அவர்களது பிள்ளைகளையும் தமிழ்நாடு அரசும் தமிழக மக்களும் அன்போடு அணைத்து அவர்களுக்கு கல்வி வசதியை வழங்கி சிறந்த முறையில் விருந்தோம்பும் பண்பினை எங்களால் ஒருபோதும் மறந்து விடமுடியாது. இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தீவக வலயப் பாடசாலைகளில்

# தற்காலிக இணைப்பாகப் பணிபுரியும் ஆசிரியர்கள் வன்னி திரும்பப் பணிப்பு!

யாழ்ப்பாணம்,மே5

தற்காலிக இணைப்பின் கீழ் தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்ற வன்னிப் பிரதேச பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் தமக்குரிய வன்னிப்பிரதேசப் பாடசாலைகளுக்குச் சென்று பணியாற்றுமாறு மாகாணக் கல்வியமைச்சு உத்தரவிட்டுள்ளது.

வன்னிப் பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகமாக உள்ளமையால் மேற்குறிப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் உடனடியாக அங்கு அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இசத், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசாவை பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-10)

### நாளை

சித்திரை 23
திங்கட்கிழமை
(06.05.2002)
திதி : நவமி
காலை 6.40 வரை
நட்சத்திரம்: சதயம்
பின்இரவு 3.27 வரை
திருநாவுக்கரசர் குருபூசை
சுபநேரம்: 11.56 - 1.26
ராகுகாலம்: 7.26 - 8.56
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சரியாகக் காரணம் கூறிவிடுவதால் மட்டும் ஒரு விடயம் நியாயமானதாகிவிடாது.

## இத்தாவில், இந்திராபுரம், வேம்பொடுகேணியில்

# மீள்குடியமர அனுமதிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

தென்மராட்சி,மே5

யுத்த பிரதேசமாகக் காணப்பட்ட இத்தாவில், இந்திராபுரம், வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடி, மிதிவெடி ஆகியவற்றை அகற்றி இப்பகுதி மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு இப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதிகளில் உள்ள வீடுகளைப் பார்வையிடச் செல்லும் மக்கள், அப்பிரதேசத்தில் மிதிவெடி குறித்து அபாய அறிவிப்புப் பலகைகள் காணப்படுவதால் தமது வீடுகளுக்குச் செல்ல அஞ்சித் திரும்புவதாகத் தெரிவித்தனர்.

இப்பகுதியில் கட்டடங்களும் வீடுகளும் பேரழிவுக்கு உள்ளாகி இருப்பதால் அனைத்துக் குடியிருப்பாளர்களுக்கும் தற்காலிக இருப்பிட வசதிகள் செய்து மீளக்குடியமர்வு நிவாரணம் வழங்குவதில் முன்னுரிமை வழங்குமாறு கோரப்பட்டது.

(ஒ-117)

# படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களின் விவரம் சமர்ப்பிப்பு

### இந்து கலாசார அமைச்சிடம்

யாழ்ப்பாணம்,மே5

குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களின் விவரங்களை பிரதேச செயலர்கள் இந்து கலாசார அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்.செயலகத்தில் இந்து கலாசார அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரன் ஏற்பாடு செய்த கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதேச செயலர்களே இந்த விவரங்களையும் சமர்ப்பித்தனர்.

இதன்படி - 274 ஆலயங்களும் இரு மடங்களும் படையினர் வசம் இருப்பது தெரியவந்துள்ளது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களின் எண்ணிக்கை பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக வருமாறு:-

அப்பகுதியில் உள்ள மொத்த ஆலயங்களின் எண்ணிக்கை அடைப்புக் குறியில் காட்டப்பட்டுள்ளது.

☆ சாவகச்சேரி (352) - 60
☆ தெல்லிப்பழை (240) - 172
☆ உடுவில் (200) - 3
☆ கோப்பாய் (252) - 1
(ஒருமடத்திலும் உள்ளனர்.)
☆ ஊர்காவற்றுறை (258) - 7
☆ பருத்தித்துறை (240) - 9
(ஒருமடத்திலும்)
☆ மருதங்கேணி (150) - 5
☆ கரவெட்டி (187) - 2
☆ சண்டிலிப்பாய் (127) - 1
☆ நல்லூர் (145) - 3
☆ வேலணை (153) - 2
☆ சங்கானை (155) - 4
☆ யாழ்ப்பாணம் (58) - 5

புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரும் படையினர் ஆலயங்களை விட்டு வெளியேறாமை தொடர்பாக பிரதமருக்குத் தெரியப்படுத்துவதாகவும் -

ஒவ்வொரு பிரதேச செயலர்களும் தமது பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் படையினர் பிரசன்னமாகி இருப்பது குறித்து கண்காணிப்புக் குழுவுக்கு முறையிடவேண்டும் என்றும் - பரமேஸ்வரன் தெரிவித்தார்.

(ஒ-ரி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

அன்னையின் மடியில் 19 ❖ 07 ❖ 1943



ஆண்டவனின் அடியில் 06 ❖ 04 ❖ 2002

## அமரர் சண்முகம் பத்மநாதன்

திதி:06.05.2002

மலையொன்று சரிந்து மடிந்ததுவோ - மண்மீது
சிலையாகி நிற்கின்றோம், சிந்துகின்றோம் கண்ணீரை செந்நீராய்
உலைமீது மெழுகாக உருகித்து நிற்கின்றோம்....
அலையாகிப் போனதுவோ அவனிதனில் உன்வாழ்வு....
நிலையற்ற வாழ்வுதனில் நல்லறமெனும் இல்லறம் நடத்தி
பாரினிலே நற்புதல்வரை ஈன்றெடுத்து.....
சான்றோரெனக்கேட்டு அகமகிழ்ந்து உளம் பூரித்த.....
எம் தலைவா.....!
நீ இருந்தபோது தலை நிமிர்ந்து நின்றோமே!
அப்பா என்றழைக்க எமக்கினி யாருண்டு?
எங்களை அன்போடும், பாசத்தோடும் வளர்த்த
அருமைத் தந்தையே!
உங்கள் பிரிவால் வாடுகிறோம், கதறுகிறோம்.....
எங்கள் அன்புத் தெய்வமே!

இன்றோடு 31நாள் முடிந்திட்டாலும் எம்வாழ்வில் எந்நாளும் உங்கள் நினைவுகள் நிறைந்திருக்கும். சகோதரர்கள், மருமக்கள், அன்பர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் நீயொரு அன்பான, பண்பான, பாசமுள்ள பெரியண்ணாவாகவே வாழ்ந்தாயே!

எமது இல்லத்தில் (நாளை) நடைபெறும் எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*பராசக்தி கிறீம் ஹவுஸ்,*
*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில்.* (3405)

*தங்கள் பிரிவால் வாடும்:*
அன்பு மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மருமக்கள

## முட்டை விலை வீழ்ச்சி

குருநகர்,மே5

யாழ்ப்பாணத்தில் கோழி முட்டை விலை வீழ்ச்சியடைந்து வருகின்றது. கடந்த இரு தினங்களுக்கு முன்னர் 7 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட இதன் விலை 5ரூபா 50 சதமாக வீழ்ச்சியடைந்தது. (உ-15)

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

சங்கானை,மே5

சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்தின் முதலாம் வருட நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு எஸ். பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

காலை நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர் கே.இரட்ணவேலும் மாலை நிகழ்ச்சிகளில் பிரதமவிருந்தினராக மின் அத்தியட்சகர் பி.சண்முகானந்தசிவமும் பங்குபற்றுவர். (ஜ-29)

## படை நகர்வு

தென்மராட்சி,மே5

தென்மராட்சிப் பிரதேசத்தில் மிருசுவில், உசன் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினரின் அணிகள் கடந்தவாரம் தொடக்கம் வடமராட்சி கிழக்கில் உள்ள நாகர் கோவில் பகுதிக்கு நகர்த்தப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

எழுதுமட்டுவாழ் விளுவளைப் பகுதியிலிருந்து நாகர் கோவில் வரையான பகுதிகளில் முகாம்கள் அமைப்பதற்காக எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு ஆகிய பகுதிகளில் எஞ்சியிருந்த வீடுகளும் படையினரால் அப்புறப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

## ஆய்வுரை

யாழ்ப்பாணம்,மே5


யாழ்.ஆங்கிலப் படிப்பு வட்டத்தின் மாதாந்தக் கருத்தரங்குத் தொடரில் இம்மாதக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ஆங்கிலம் கற்கும் பிள்ளைகளின் தவறுகள் குறித்து யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் எஸ்.ஜி.சிவகுருநாதன் ஆய்வுரை வழங்குவார். (உ-3)

## விண்ணக வாழ்வின்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 03 - 03 - 1979



விண்ணில் 27 - 04 - 2000

## அமிர்தலிங்கம் லோகநாதன்

(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மாணவன்)

திதி: அபரநவமி 05.05.2002

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டு மாறாது தங்களது ஆத்மா சாந்தி அடைய இறையருள் வேண்டுகின்றோம்.

*16ஆம் கட்டை,*
*கரணவாய் மேற்கு, கரவெட்டி.* (3392)

*தங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 03 - 08 - 1923



ஆண்டவனின் அடியில் 05 - 04 - 2002

## திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம்

*அன்புக்கினிய எமதருமைத் தாயே! எமதருமைத் தெய்வமே!*
*துன்பங்கள் பல சுமந்து அதனை ஒரு நாளும் உரையாமல்*
*எங்கள் வாழ்வுக்காய் இன்பம் பல துறந்தெம்மை*
*இவ்வுலகில் ஏற்றி வைத்தீர்கள் அம்மா! உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?*
*நீங்கள் இன்றில்லை என்பது நிஜமானாலும் நித்தமும்*
*நீங்கள் எம்முடன் வாழ்வது நிஜமே!*

உங்கள் ஆத்மா பரிபூரண சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*V.H.லேன்,*
*இருபாலை,*
*கோப்பாய்.* (3346)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவுகூரலும் கண்ணீர் அஞ்சலியும்

எமது சக ஆசிரியர் திரு-சு.விவேகானந்தன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம்

அவர்கள் 05.04.2002இல் சிவபதமடைந்ததையிட்டு அவர்களை இந்நாளில் நினைவு கூர்வதுடன் அவருக்கு கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கோப்பாய் தெற்கு,
கந்தவேள் த.க.பாடசாலை.

(3435)

# மரண அறிவித்தல்கள்

## கணபதி ஜீவகாருண்யம் (B.A.)

(நிறைவேற்று அதிகாரியும் உதவி முகாமையாளரும் இ.போ.ச. காரைநகர் சாலை)

காம் வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 187, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி ஜீவகாருண்யம் 28.04.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பாக்கியம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - யோகம்மா தம்பதிகளின் மருமகனும் ஜெயரெட்ணத்தின் அன்புக் கணவரும் இராஜகோபால், Dr.பேரின்பநாயகம், நேருஜிநேசன், மகேஸ்வரி, கமலகுமாரி ஆகியோரின் சகோதரரும் விஜயகாந்தன், ஜெயசீலன், லதக்குமார், தேவகுமார், ரஞ்சினிதேவி, அருள்நாயகி, ஜெயந்தி, மேகனலதா, மகிழினி, ஜெகசோதி, சச்சிதானந்தம் ஆகியோரின் மைத்துனரும் பசுபதி, மாணிக்கம் ஆகியோரின் பெறாமகனும் யோகலிங்கத்தின் சகலனும் ஜெனனி, யாழினி, கஜந்தினி, நிலாஜினி, சிவாஜினி, அம்பிகைபாலன், கேதீஸ்வரன், விக்னேஸ்வரன், ஹரிகரன், சர்மினி, சோபனா ஆகியோரின் மாமனாரும் அகிலன், ஜீவிதா ஆகியோரின் பெரிய தந்தையும் பிரதிஸ்குமார், சயந்தினி, மிதுலன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (05-05-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*187, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (3451)

தகவல்:
திருமதி ஜீ.ஜெயரெட்ணம்
(மனைவி)

## த.சபாபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்தவருமான தம்பையா சபாபதிப்பிள்ளை அவர்கள் 30.04.2002 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வரும் குகலட்சுமியின் (கனடா) ஆருயிர்க் கணவரும் விஜிதாவின் (கனடா) பாசமிகு தந்தையும், யோகன் வேதநாயகத்தின் (கனடா) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மதியாபரணம் சுப்பிரமணியத்தின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மா, அன்னப்பிள்ளை, சீதேவன்பிள்ளை, லட்சுமிப்பிள்ளை, பாக்கியலட்சுமி (திருகோணமலை), காலஞ்சென்ற குமாரசுவாமி, நடராசா (பொலிகண்டி), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற வல்லிபுரம், சின்னையா, ராசையா, கந்தசாமி, பாலகிருஷ்ணர், கமலாம்பாள் (பொலிகண்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்றூ, ஆதித்தியாவின் (கனடா) பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.05.2002) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனடா தொடர்பு:*
*295, DUFFERIN STREET # 404,*
*TORONTO, ON M6K 3G2*
*CANADA*
*Tel:01- 416 - 5886543* (C-22011)

தகவல்:
நா.சுவர்ணலிங்கம்
(சகலன்)

# ஜெயலலிதாவின் புலிகள் எதிர்ப்புப் போக்கு சோனியாவின் ஆதரவு பெறும் நோக்குடையதா?

**தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 30 ஊழல் வழக்குகளும் இன்னும் விசாரித்து முடிக்கப்படவில்லை. மேன் முறையீடுகளுக்கான தீர்ப்புகள் விரைவில் வெளியாகவுள்ளன. ஊழலற்றவர் - புனிதமானவர் என இன்னும் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் உள்ள ஜெயலலிதா, மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் நோக்கிலும் சோனியா காந்தியை அரவணைக்கும் நோக்கிலும் பிரபாகரனைக் கைதுசெய்யக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். இது குறித்து 'ல்ங்கா தீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த சில வாரங்களாக தமிழ் அரசியல் வட்டாரங்களைக் குழப்பியடிப்பதில் தமிழ்நாடு முதல்வர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் வெற்றிகண்டுள்ளார். விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடு கடத்த வேண்டும் என்ற விசேட தீர்மானத்தை தமிழக சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளார்.

இந்தச் சம்பவத்தை இந்நாட்டிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் மிகவும் வேதனையுடன் கண்ணுறுகின்றன. இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் இழைத்த மிகப் பெரிய துரோகமாக இதைக் கருதுகின்றனர்.

தமிழ்நாட்டு முதல்வரின் இச்செயல் குறித்து விடுதலைப் புலிகள் கூட அமைதி பேணும் இவ்வேளையில், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ள தமிழ்க்கட்சிகள் ஜெயலலிதாவின் கொடும்பாவியை எரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வு பெரும்பாலும் ஜெயலலிதா எதிர்ப்புக் கூட்டமாகவே அமைந்தது. அந்த நிகழ்வில் ஜெயலலிதா முக்கிய தலைப்பாகக் கருதப்பட்டதானது அவர்மீது தமிழ்மக்கள் கொண்டுள்ள எதிர்ப்பின் அளவைப் பிரதிபலிக்கிறது.

இதற்கு முன்னர் நடைபெற்ற 'பொங்குதமிழ்' நிகழ்வுகளில் பிரபாகரனின் சிறப்பியல்புகள் குறித்தே பேசப்பட்டன. ஆனால், அண்மையில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் ஜெயலலிதாமீது வசைபாடப்பட்டது.

ஜெயலலிதா மீது கடுமையான விரோதப் போக்கை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வெளிக்காட்டினர். 'பொங்கு தமிழ்' நிகழ்வில் உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கவடிவேல் சுவையான தகவலை வெளியிட்டார். அவரது உரை பத்திரிகைகளில் பின்வருமாறு வெளிவந்திருந்தது.

"பிரபாகரன் எமது தேசியத் தலைவர். அவரைக் கைது செய்ய ஜெயலலிதா யார்? இந்திய இராணுவத்தை அனுப்பி பிரபாகரனைக் கைது செய்ய வேண்டுமென ஜெயலலிதாவால் கூற முடியுமாயின் தமிழீழ இராணுவத்தை அனுப்பி ஜெயலலிதாவைக் கைது செய்து தமிழீழத்திற்கு கொண்டுவர வேண்டுமென வேண்டுகோள் விடுக்க எங்களால்முடியும்."

இது ஜெயலலிதா தொடர்பாகத் தங்கவடிவேல் கொண்டுள்ள நிலைபாடாகும். "தமிழ்நாட்டில் சூலமங்கலம் காடுகளில் திரியும் வீரப்பனைக் கைதுசெய்ய முடியாத ஜெயலலிதா, விடுதலைப் புலிகளின் தலைவரைக் கைதுசெய்யவேண்டும் என நினைப்பது ஒரு பகல் கனவு மாத்திரமே" என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் தீர்மானத்தால் வெறுப்புற்ற நிலையில் உள்ள செய்தி ஊடகங்களுக்கு இவ்வாறான அறிக்கைகள் தித்திப்பான விடயமாகும். ஜெயலலிதாவின் இந்தத் தீர்மானம் குறித்த செய்திகளுக்குத் தமிழ் செய்தி ஊடகங்கள் முக்கிய இடமளித்தன. தலையங்கங்கள் வெளியிட்டன.

இந்த விடயம் தொடர்பாக கடுமையான போக்கைக் கொண்ட "சுடர் ஒளி" ஜெயலலிதாவின் அண்மைக் கால நடவடிக்கைகளை "விசர் ஆட்டம்" என வர்ணித்தது. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்கமுடியாவிடினும் குறைந்தது இந்தச் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பாமலாவது இருக்கக் கூடாதா? என அந்தப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் கோரியுள்ளது.

இந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ உட்பட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட போதிலும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வது என அரசு தீர்மானித்துள்ளது. இருப்பினும் ஓர் அரசியல் தலைவரின் படுகொலையினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துத் தமிழ் மக்களையும் காட்டிக்கொடுக்கும் முயற்சிகளை உடனடியாகக் கைவிடுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மூத்த தலைவர் ஜெயலலிதாவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

எவ்வாறாயினும் ஜெயலலிதாவின் இந்தத் தீர்மானத்தால் இந்நாட்டில் உருவாகியுள்ள தீவிர வெறுப்பு நிலைக்குச் சமமான ஜெயலலிதா உணர்வலை தற்போது தமிழ்நாட்டிலும் உருவாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அந்நாட்டில் வெளியாகும் செய்தி ஊடகங்களை அவதானிக்கும்போது ஜெயலலிதாவின் இந்த நடவடிக்கையை காரசாரமாகச் சாடுகின்றன. இந்த வகையில் தமிழ்நாட்டுச் செய்தி ஊடகங்கள் ஸ்ரீலங்காவிலுள்ள தமிழ் செய்தி ஊடகங்களைவிட தீவிரமாக உள்ளன.

பிரபாகரனுக்கு எதிராகச் செயற்படுவதற்கு ஜெயலலிதாவுக்குப் புதிய காரணங்கள் எவையும் இல்லாவிடினும் இந்நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகள் புலிகள் மீது குறைகாண்பதற்கு ஜெயலலிதாவிற்கு நுழைவாசலை அமைத்துள்ளன போல் தெரிகிறது.

ஜெயலலிதாவின் இந்த நடவடிக்கை குறித்து தமிழ்நாட்டில் சார்பாகவும் எதிராகவும் கருத்துகள் உருவாகியுள்ளன. தமிழ்நாட்டு மக்கள் என்ன கருத்தைக் கொண்டிருந்தாலும் அங்குள்ள அரசியல் கட்சிகளில் சில, அதாவது பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் ஆகியன இந்தத் தீர்மானத்தை எதிர்த்துள்ளன.

இதைவிட சில அரசியல் கட்சிகள் சட்டசபைக்கு வெளியே ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை ஒழுங்கு செய்தன. பிரபாகரனின் மிக ஆதரவாளர் எனக் கருதப்படும் ப.நெடுமாறன் மற்றும் வை. கோபாலசாமி போன்றவர்கள் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டனர். இருப்பினும் விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் எவருக்கும் அல்லது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஊர்வலங்களை நடத்து வோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு பயங்கரவாதத் தடைசட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவர் என ஜெயலலிதா தெரிவித்துள்ளார். தமிழ் நாட்டில் வெளியாகும் ஒருசில பத்திரிகைகள் ஜெயலலிதாவின் நிலையை ஆதரிக்கின்றன. இவற்றுள் 'இந்து' பத்திரிகை முக்கிய இடம்வகிக்கிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலையை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது எனத தெரிவிக்கும் அந்தப் பத்திரிகைகள், பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்தவேண்டும் என்ற நிலைக்கு தமது திருப்தியையும் தெரிவித்துள்ளன.

மறுபுறத்தில் மிகப் பழைய பத்திரிகைகளில் ஒன்றான 'தினமணி', ஜெயலலிதாவின் இந்தத் தீர்மானத்துக்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன் அந்தத் தீர்மானத்தை சட்டசபையில் நிறைவேற்றியதன் மூலம் ஜெயலலிதா சதாகாலமும் மறக்கமுடியாத துரோகத்தைத் தமிழ்மக்களுக்கு இழைத்துள்ளார் எனத் தெரிவித்துள்ளது.

இந்த வாத, விவாதங்கள் ஒருபுறமிருக்க மற்றொருபுறம் நோக்கி நாம் கவனத்தைச் செலுத்தவேண்டியுள்ளது. அதாவது தமிழ்நாட்டில் மிகவும் பழமை வாய்ந்த கட்சிகளில் ஒன்றான தி.மு.கழகத்தின் மௌனமாகும். விடுதலைப் புலிகள் அமைப்பைப் போஷித்த கட்சிகளுள் தி.மு.கவுக்கு முக்கிய இடமுண்டு. தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மிகவும் மோசமான அளவிற்கு உணர்வலைகள் நிலவிய வேளையிலும்கூட தி.மு.க. விடுதலைப் புலிகளுக்கு அதரவைத் தெரிவித்துவந்தது.

இருப்பினும் இம்முறை சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட இந்தத் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது பேசா மடந்தைகளாக வெளிநடப்புச் செய்துள்ளது. தி.மு.க. இதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை.

கடந்த சட்டசபைத் தேர்தலின் போது விடுதலைப் புலிகளுக்கு எதிரான தீவிரபோக்குடைய ஜெயலலிதாவிடம் தமிழ்நாட்டு மக்கள் ஆட்சிப் பொறுப்பைக் கையளித்தது ஒரு காரணமாக இருக்கலாம். அந்தத்



தேர்தலின்போது தி.மு.க. ஓரளவிற்கு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான போக்கை கடைப்பிடித்தது எனக் கூறப்படுகிறது.

இருப்பினும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தனது கட்சிப் பத்திரிகையான 'முரசொலிக்கு' கருணாநிதி விசேட செய்தியொன்றை வழங்கியிருந்தார். அதில் அந்தத் தீர்மானத்தை வரலாற்றில் கறைபடிந்த பக்கம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

**தமிழில்: கஜனி**

எவ்வாறாயினும் பிரபாகரனைக் கைதுசெய்து இந்தியாவிற்குக் கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானம் தற்போது தமிழ்நாட்டில் சட்டபூர்வமாக எடுத்துக்கொள்ளப்பட்ட தீர்மானமாகிவிட்டது. சமீப காலத்தில் விடுதலைப் புலிகள் எதிர்கொண்ட மிகப் பெரிய தோல்வியென இதைச் சிலர் வர்ணிக்கின்றனர்.

இந்தத் தீர்மானத்தைத் திடீரென ஜெயலலிதா கொண்டுவரவேண்டிய சூழ்நிலை அல்லது அவரை இவ்வாறு செயற்படத் தூண்டிய காரணத்தைக் கண்டறிவது முக்கியமானதாகும்.

ஜெயலலிதா ஆரம்பகாலத்தில் இருந்தே விடுதலைப் புலிகள் பற்றித் தெளிவான கருத்தைக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக இருந்த காலத்தில் அவரின் செயலாளராகப் பணியாற்றியபோது விடுதலைப் புலிகளின் தேவைகளை ஏனோதானோ என்ற நோக்கில் கவனித்தாரேயன்றி உளமார நிறைவேற்றவில்லை என்பது ஜெயலலிதாவின் அண்மைக்கால நடவடிக்கைகள் விளக்குகின்றன.

தமிழ்நாட்டில் ஏனைய தலைவர்களை எல்லாம் தமது கைக்குள் போட்ட விடுதலைப் புலிகளுக்கு ஜெயலலிதாவை தம்பக்கம் ஈர்க்க முடியவில்லை. அவர் தமிழரல்லாத காரணத்தாலேயே அவரை விடுதலைப் புலிகளால் தம்பக்கம் ஈர்க்கமுடியவில்லை என சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் தற்போது முக்கிய எதிர்க்கட்சியாக விளங்கும் இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் நெருங்கிய தொடர்புகளை உருவாக்குவதில் ஜெயலலிதா வெற்றிகண்டுள்ளார். தற்போது குஜராத்தில் இடம் பெறும் வன்முறைகள் காரணமாக நிலைகுலைந்துள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் எதிர்காலம் அடுத்த பொதுத் தேர்தலில் தீர்மானிக்கப்படும் என்பதே இந்திய அரசியல் விமர்சகர்களின் கணிப்பாகும். அவ்வாறான ஒரு நிலையில் சோனியா காந்தியின் தலைமையிலான இந்திரா காங்கிரஸுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது ஜெயலலிதாவைப் பொறுத்தவரை லாபம் தரும் விடயமாகும். சோனியாவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடும் போக்கினைக் கடைப்பிடிக்கும் நிலையில் தனது அரசியல் லாபத்தைப் பெறுவதற்கு இது ஒரு சிறந்த வழியென ஜெயலலிதா நினைக்கிறார். அதை நோக்கியே ஜெயலலிதா தற்போது பயணம் செய்கிறார். அந்தப் பயணத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறவர்கள் தற்போது அமைதி பேணிவரும் தமிழ்நாட்டு மக்களே ஆவர். *

# வாழ்வியல், பண்பாட்டை எடுத்தியம்பும் வித்தகம் நிறைந்த 'விசுவேசர் புராணம்'

**நூல்வரிசை**

தமிழ் இனிமையும் பழைமைச் சிறப்பும் வாய்ந்த மொழியாகும். இம்மொழி பரந்துபட்ட இலக்கியப் பரப்பினையுடையது. சங்க இலக்கியங்கள், கீழ்க்கணக்கு இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், திருமுறை இலக்கியங்கள், புராண இதிகாச இலக்கியங்கள், பிரபந்த இலக்கியங்கள் என தமிழின் பெருமையைக் காட்டும் சான்றுகள் பல.

இவற்றில் புராண இலக்கியங்கள பெரும்பாலும் கி.பி.12ஆம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்தன என்பர். புராணம் என்பதற்கு பழைய வரலாறு என்று பொருள்கொள்வர். வேதங்கள் கூறும் உண்மைகளைக் கதைகளின் வாயிலாகக் கூறுவது புராணம் எனலாம். புராணங்களைத் தொடர்ந்து தலபுராணங்கள் தோன்றின. இத்தல புராணங்கள் மக்களது சமய நம்பிக்கைக்கும் வாழ்வியலுக்கும் வழிகாட்டி நிற்பதோடு திருக்கோயில் சார்ந்த பண்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய தல புராணங்களில ஒன்றாக விளங்குவது விசுவேசர் புராணமாகும்.

**நூலின் பெயர்:** அருள்மிகு விசுவேசர் புராணம்.
**நூலாசிரியர்:** புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார்

வட்டுக்கோட்டையில் கோயில் கொண்டு எழுந்தருளிய விசாலாட்சி சமேத விசுவேசப் பெருமானின் வரலாற்றை எடுத்துக் கூறும் நூலக விளங்கும் விசுவேசர் புராணத்தை அவ்வூரைச் சேர்ந்த புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார் ஆக்கியுள்ளார். தலபுராண மரபினின்றும் வழுவாது ஆழமான பக்தி உணர்வோடு விருத்தப்பாவினால் அவர் இதனையாட்டுள்ளார்.

விசுவேசர் புராணம் ஆதி காண்டம், அருள்புரி காண்டம் என இரு பிரிவுகளைக் கொண்டது. ஆதி காண்டத்தில் பாயிரச் சருக்கம், கைலைமலைச் சருக்கம், யாழ்.நாட்டுச் சருக்கம், வட்டு மாநகர்ச் சருக்கம், வீரபத்திர சுவாமி சருக்கம் என ஐந்து உப பிரிவுகளும் -

அருள் புரிகாண்டத்தில் உபதேசச சருக்கம், விசுவேசச் சருக்கம், சுப்பிரமணிய சுவாமி சருக்கம், கூத்தப்பிரான் சருக்கம், விழாவயர் சருக்கம் என ஐந்து உப பிரிவுகளும் -

இடம்பெற்றுள்ளன.

ஆசிரியர் காப்பிய மரபை ஒட்டி பாயிரச் சருக்கத்தில் பதிகம் என்னும உறுப்பைச் சேர்ந்துள்ளார். இப்பதிகம் நூற்கருத்தைப் பருப்பொருளாகக் கூறும். கைலைமலை சருக்கத்தில் சித்தித் தலங்கள் சிலவற்றைப் பற்றிச் சிவபெருமான் நாரதருக்குக் கூறும் செய்தி கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்து மாண்புகள் அனைத்தும் யாழ்.நாட்டுச் சருக்கத்தில் விவரிக்கப்படுகின்றன. வட்டு. மாநகரின் பீடார் செம்மை அனைத்தினையையும் வகைப்படுத்தி வட்டு.மாநகர்ச் சருக்கம் கூறுகின்றது. யாழ்.நாட்டு நல்லைப் பதியிலிருந்து வீரபத்திர சுவாமி வந்த செய்தியை வீரபத்திரச சருக்கம் விளம்புகின்றது.

மேலும் சிவசித்தர் அப்பா முதலிக்கு, நந்தி கணநாதர் வேதாந்த, சித்தாந்தக் கருத்துக்களை உபதேசித்த செய்தியை உபதேசச் சருக்கம் விளம்புகிறது. காசிப் பதியிலிருந்து விசுவேசப் பெருமான் வட்டூர் புகுந்த வண்ணத்தை விசுவேசச் சருக்கம் சொல்கிறது. சுப்பிரமணிய சுவாமி சருக்கமும் "சூடும் கொன்றைச் சடை தாழத் தொம் தொம் என்றே முழவதிர" தில்லையில் ஆடும் கூத்தன் வந்த செய்தியை கூத்தப்பிரான் சருக்கமும் வட்டூர வாழ்நர் மகோற்சவாதிகளை இயற்றும் பரிசை விழாவயச் சருக்கமும் வெளியிடுகின்றன.

இந்நூல் மரபுவழிச் செய்யுள்கள் 1320 கொண்டு நிறை வெய்துகின்றது. கருத்தில் களஞ்சியமாக விளங்கும் இந்நூலில் உள்ள பாடல்கள் சொற்சுவை, பொருள் சுவை, சந்தவின்பம், அணிநலம், உணர்ச்சி, பாவம் போன்ற பல்வேறு சிறப்புக்களும் நிறைந்து காணப்படுகின்றன.

நூலில் கிறிஸ்தவர்கள் வட்டூருக்குச் செய்த சேவையை புலவர்மணி நினைவு கூருகிறார்; போற்றுகிறார்.

மகளிரை அடிமை செய்யும் மடமையைச் சாடலுற்றார் தானும் 'தகவுறு கல்வி தானும் சகலர்க்கும் பொதுவாம் என்றார். அகமதில் அன்பு கொண்டே அனைவரும் வாழ்ந்தீர் என்றார் பகை தரு சாதிபேதம் பார்த்திடல் பாவம் என்றார்.'

மேலும் நூலாசிரியர் வேதாந்த, சித்தாந்த கோட்பாடுகளை எவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் எளிமையாகக் கூறுகிறார். "வேதமென்னும் பாதவம் வளர்த்தனை'' என்று தொடங்கி (பாதவம் - மரம்) அந்த மரத்தின் இலையொடு நின்றார் சிலர்; பூவொடு நின்றார் சிலர்; காயொடு நின்றார் சிலர்; சிலர் கனி கொண்டார் சிலர்; கனியின் சாறு கொண்டார் சிலர் என்று குறிப்பிட்டது நினைவுக்கு வருகின்றது. ஆம் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் என்பது உமாபதி தேவர்வாக்கு.

**பண்டிதர்: மு.சு.வேலாயுதபிள்ளை**

கிறிஸ்தவர்களுக்கு பெத்தலகேம், முகமதியர்களுக்கு மெக்கா நகர் போன்று இந்துக்களுக்கு காசியம்பதி உயர்ந்ததாகும். காசியிலிருந்து விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமான் வட்டூர் போந்த செய்தியை புலவர்மணி இனிக்க இனிக்கப் பாடுகிறார். விசுவேசரை சிவசித்தர் அப்பா முதலி அவர்கள் போற்றித்துதிப்பதாக வரும் பகுதி நெஞ்சை உருக்குகிறது. கூத்தப்பிரான் சதுக்கத்தில் தாண்டவ பேதங்கள் விளக்கப்படுகின்றன. ஆசிரியர் எல்லோரையும் வட்டூர் வந்து இறைவனை வணங்கி பேறு பெறுவீர் என்ற அழைக்கும் பகுதி இனிமையைத் தருகிறது.

## சாவகச்சேரியில் பாலர் பராமரிப்பு இல்லம்

யாழ்ப்பாணம்,மே5

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு இல்லம் நாளை திங்கட்கிழமை 8.30 மணிமுதல் சாவகச்சேரி சுண்டுவில் ஒழுங்கையில் இயங்கவுள்ளதாக இல்லத்தின் தலைவர் தெரிவித்தார். (ஒ-13)

# ஹாட்லி கல்லூரி மாணவர்களுக்கு!

வடமராட்சி,மே5

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கணனிப்பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது பாடசாலை விடுமுறையாதலால் பயிற்சி வகுப்பில் பங்குகொள்ளாத மாணவர்கள் உடனடியாக கல்லூரியுடன் தொடர்புகொண்டு நேர சூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் மு.ஸ்ரீபதி தெரிவித்துள்ளார். (ஒ-173)


## அவசர கலந்துரையாடல்

சகல றோட்டறக்ட் கழக நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று (05.05.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு 'உதயன' பணிமனையில் நடைபெறவிருக்கின்றது. சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/22028) - யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம்.

## ஷென்மென் அகுபங்சர் கிளினிக்

ஊசிகள், மருந்துகள் அல்லது உணவுக் கட்டுப்பாடின்றி உடற்பருமனைக கூட்டுதல், குறைத்தல், சத்திர சிகிச்சையின்றி கற்றாக் அகற்றுதல், கண பார்வை சீர்செய்தல், ஆஸ்த்மா, நீரிழிவு, இரத்த அழுத்தம், நாள்சென்ற நோக்கள், தலைமுடி வளரச் செய்தல் உட்பட சகலவிதமான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

தொடர்பு: **Prof.Dr.R.P.Sankar**

ஷென்மென் அகுபங்சர் கிளினிக் 2
182, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.
*(சுதாஸ் கலைச்சோலை வெய்யில் உகந்த பிள்ளையார் கோயில் முன்பாக)*

ஷென்மென் அக்குயுபஞ்சர் கிளினிக் 1
No.6, நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.
(இராமகிருஸ்ணமிஷன் பாடசாலை பின் வீதி, செம்பியன் ஒழுங்கை)

(3473)

## வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்க



## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று (05. 05. 2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 (புதிய நேரம்) மணிக்கு தலைவர் திரு. இ. மனோகரராசா அவர்களின் தலைமையில் யாழ். ப. நோ. கூ. சங்க தலைமையகக் கட்டடத்தில் நடைபெறும். விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் ஓட்டோ சேவையிலீடுபடும உரிமையாளர் - சாரதிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதோடு தனியார் சேவை, வாடகை சேவை உள்ளிட்ட சகலரும் எமது சங்கத்தில் பதிவுசெய்து சேவையிலீடுபடுவதே எதிர் காலத்தில் தங்களுக்கு உகந்தது எனவும் அறிவுறுத்துகின்றோம்.

*முனீஸ்வரன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (3464) **தலைவர்.**

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் அறிவித்தல்

எமது புதிய வெதுப்பகத்திற்கான பின்வரும் கட்டட மூலப் பொருள்கள் தர விரும்புவோர் மேற்படி சங்க விலாசத்திற்கு ஏற்றி வந்து ஒப்படைக்க கல்லொன்றுக்கான தங்கள் கேள்வியை 15.05.2002இற்கு முன்னர் பதிவுத் தபாலில் "பொது முகாமையாளர். பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ. கூ.சங்கம். பண்டத்தரிப்பு" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வெதுப்பக மூலப் பொருள் விவரம்:

| | | |
|---|---|---|
| செங்கல்லு | - | 8000 தனி |
| ஒயில் கல்லு | - | 600 தனி |

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.


(C/22029)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சபாரத்தினம் கனகசபாபதி

(உப அஞ்சல் அலுவலகம், கொக்குவில்)



ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன
உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமோ?
தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன
உங்கள் திருமுகம் பார்த்தால் போதாதா?
என்னைத் தன்னந் தனியாக்கி விட்டீர்கள்!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.*

பிரிவால் துயருறும்:
மனைவி.

*இணுவில் தெற்கு.* (3466)

## இருவருக்கு அபராதம்

தென்மராட்சி,மே5

மீள்குடியமர்வின் பின்னர் மட்டுவில் வடக்குப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபட்ட இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் அபராதம் விதித்துள்ளார்.

3ஆயிரத்து 290 டிராம் கோடா வைத்திருந் ஒருவருக்கு 75ஆயிரம் ரூபாவும், 208 டிராம் கசிப்பு வைத்திருந்த நபருக்கு 18 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## யாழ்.ஆஸ்பத்திரியில் கைப்பை கண்டெடுப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ பரிசோதனைப் பிரிவில் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவித்து விசேட அடையாள அட்டை அடங்கிய 'பேர்ஸ்' ஒன்றும், சிறு தொகைப் பணத்துடனான மற்றொரு கைப்பை ஒன்றும் வைத்தியசாலை நிர்வாகக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டள்ளன.

உரியவர்கள் தகுந்த அடையாளத்தைக் காட்டி இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது. (ஒ-15)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு!

மறியற்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துத் தமது பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர்.

ஆகவே நிரந்தர ஆசிரிய நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் தமது பெயர், விவரங்களை நாளை திங்கட்கிழமை மறியற்போராட்டம் நடைபெறும் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பணிமனை முன்பாக சங்கப் பிரதிநிதியிடம் பதிவு செய்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-10-173)

## கலந்துரையாடல்கள்

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய அலுவலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா கேட்டுள்ளார். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கச்சேரியடியில் உள்ள சோமசுந்தரம் முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இதில் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே5

தென்மராட்சிப் பகுதி சுகாதாரத் தொண்டர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல சுகாதாரத் தொண்டர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

## காசநோய் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே5

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தில் காசநோய் தொடர்பான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் நடத்தப்படும் இக்கருத்தரங்கினைத் தொடர்ந்து இது தொடர்பான நாடகம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அனைத்து மக்களுக்கும் அப்பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அழைப்பு விடுத்துள்ளார். (ஒ-15)


## அகுபங்சர் (Acupuncture) ஹோமியோபதி (Homeopathy) சிகிச்சை

எயிட்ஸ் நோய் நிலைமை உட்பட அனைத்து நோய்நிலைமைகளும் எளிமையாகவும் பூரணமாகவும் குணப்படுத்த முடியும் என்பது ஆணித்தரமான உண்மையாகும்.

பரந்துபட்ட பொதுமக்களின் நன்மை கருதி பின்வரும் தகவலைத் தெரிவிக்கின்றோம்.

1. அமெரிக்க ஆராய்ச்சியாளர்களின் பின்வரும் தகவலைப் படியுங்கள்.
*தகவல்:-*
"நீரிழிவு நோய்களுக்கு "சாராயம்" தான் ("மது") அருமருந்து"
(ஆதாரம்:- "JAMA", July 21 1999)

சகோதர சகோதரிகளே! முழுக்க முழுக்க கேட்டைத் தவிர நன்மையைச் சிறிதளவு கூட விளைவிக்கத் தகுதியற்ற இந்தச் சாராயத்தை ஒரு நோய்க்கு மருந்தாகப் பரிந்துரை செய்கின்ற ஆராய்ச்சியாளர்களின் "ஆராய்ச்சி"எவ்வளவு "கோமாளித்தனம்" நிறைந்தது என்பதற்கு இதைவிட வேறு பொருத்தமான ஆதாரம் உங்களுக்குத் தேவையில்லை. தீர்மானமாக உணர்ந்து கொள்ளுங்கள்

எந்த ஆராய்ச்சியாவது எந்தச் சாராயத்தையாவது (பனஞ்சாராயம் உட்பட) ஒரு நோய்க்காகப் பரிந்துரை செய்தால் அது மனித நலனுக்கு ஆபத்தானது என்பதை இதே தாற்பரியத்துடன் தான் கொடுமையான பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்ற ஆங்கில மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

2. நீரிழிவிற்கான ஆங்கில மருத்துவத்தின் சிகிச்சை இருதய நோயையும், ஊளைச் சதையையும் உருவாக்குகிறது.
ஆதாரம்: " யுனிவர்சிட்டி ஒப் (F) வாஷிங்டன் சியாட்டி
(ஹெல்த்டைம் யூலை, 1999 பக்கம் 52)

3. கர்ப்ப காலத்தில் "ஸ்கேன்" செய்தால் பிறக்கும் குழந்தைகளுக்கு இரத்தப் புற்றுநோய் வரும்.
ஆதாரம்: BMJ (British Medical Jornal)
(ஹெல்த்டைம், மார்ச் 2000, பக். 51)

டாக்டர் K.ரகுராம்.
மே/பா டாக்டர் வை.கதிரவேலு
உரும்பிராய் கிழக்கு (மடத்தடி).
திங்., புதன்., வெள்.
காலை 6.00 - 11.00
மாலை 3.00 - 7.00 (புதிய நேரம்)

கொக்குவிலில்
மே/பா R.சிவலிங்கம்
ரெட்ணம் அவெனியூ
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
வியாழன்
பிற்பகல் 2.00 - 7.00 (புதிய நேரம்)

(3463)

## உங்கள் கவனத்துக்கு.....

- மங்கிடும் கண்களுக்குப் பொங்கிடும் பார்வை!
- உங்கள் அழகு மேலும் பொலிவுற... புதிய வடிவமைப்பிலான உறுதிமிக்க நவீன மூக்குக் கண்ணாடிகள்!
- முக அமைப்புக் கேற்ப சங்குப்பற்கள்!

இவற்றுடன

மிதப்புப் பற்களுக்கு கிளிப் பொருத்திக் கொள்ள கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்.



ஸ்ரீ கணேஷ்

பல் கட்டுமிடமும் மூக்குக்கண்ணாடி அகமும்.
இல.564, 566, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். T.P.2486.

பழைய பொலீஸ்நிலையம் முன்பாக, கே.கே.எஸ் .வீதி, சுன்னாகம்.

*இல.91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.*

★ கட்டுப் பற்களை சுத்தம் செய்ய மாத்திரைகள் விற்பனையில் உண்டு.
★ மாணவர்களுக்கு விஷேட கழிவு உண்டு.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை

சிறுப்பிட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை நேற்று (04.05.2002) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் நமசிவாயம், சதாசிவம், குமாரவேலு, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாதேவி, செல்லம்மா, தேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் கேதீஸ்வரி (ஆசிரியை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை), சர்வகலாதேவி, சிவச்செல்வி, ஜெயச்செல்வி, கலைச்செல்வி, சந்திரிகா, பிரதீபா, பிறேமலா, பிரசாத் ஆகியோரின் அன்புப் பாட்டியும் லக்கி, அஜி, பிரவணா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி கிழக்கு,*
*நீர்வேலி.* (3461)

தகவல்:
க.சதாசிவம்

## சதாசிவம் சோமசுந்தரம்

வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சோமசுந்தரம் நேற்று (04.05.2002) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக்கணவரும் தேசிங்கராஜா (மகேந்திரன்), ரதிதேவி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் தர்மபாலன் (பிரான்ஸ்), சிவபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் தகப்பனாரும் கமலாதேவி, காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் பிரகலாதன் வேதசிரோன்மணி (பிரான்ஸ்), உதயராணி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், தனுஷா, சுகந்தன், பாமினி, நிரஞ்சினி, தியானந்தன், லலிதாதேவி, குலரஞ்சினி, லிசோதா, பிரசாந்தன், பிரசாந்தி, கஜன், நீந்தன், புகழ் (பிரான்ஸ்), நிஷாங்கன், சஜீவ், நித்தியா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் திலக்ஷன், சங்கீதன் ஆகியோரின் பூட்டனும், சிவப்பிரகாசத்தின் அன்புச் சகோதரனும் மனோன்மணியின் அன்பு மைத்துனரும் சாம்பசிவம், சிறிகாந்தன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.05.2002) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக கிரியைகளுக்காக அம்பலவி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை மேற்கு,*
*7ஆம் வட்டாரம், வேலணை.* (3469)

தகவல்:
சி.சாம்பசிவம்
*(பெறாமகன்)*

# ஆணவம், சுயநலத்தை மனதில் சுமந்தபடி அனுஷ்டானங்களை செய்வதில் பயனில்லை

## யாழ்.மாவட்ட நீதிவான் விக்னராஜா வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மே5

ஆணவத்தையும், சுயநலத்தையும் மனதில் சுமந்துகொண்டு வெறும் புற அனுஷ்டானங்களை மட்டும் அழகுறச் செய்து விடுவதில் எவ்வித பலனுமில்லை.

- இவ்வாறு வலியுறுத்தினார் யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா.

நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற இந்து சமயப் பேரவையின் சைவ மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியபோதே நீதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

"சுற்றி இருப்பவர்கள் மீது அன்பு காட்டுவதுதான் உண்மையான ஆத்மீகத்தில் ஈடுபட்டதற்கு அத்தாட்சியாகும். ஆத்மீக வாழ்க்கை என்று கூறும்போது அதுவெறும் சம்பிரதாயமாக வெளிச்சின்னங்களாக இருந்து பயனில்லை. எனவே ஆத்மீக சமய வாழ்க்கை என்னும்போது முதலில் நான் வலியுறுத்த விரும்புவது மனமாற்றத்தைத்தான். மனதில் அகங்காரத்தையும், ஆணவத்தையும், சுயநலத்தையும், சுமந்துகொண்டு புற அனுஷ்டானங்களை மட்டும் அழகுறச்செய்வது இந்து சமயத்திற்கும் நல்லதல்ல; மக்களுக்கும் நல்லதல்ல. எனவேதான் வாழ்க்கையை நோக்கும் விதத்தை மாற்றி அமைப்பது இன்றியமையாதது என்கிறேன். இந்த மாற்று வழிதான் அன்பு வழி. எங்கள் மனங்களில் "நான்" என்ற கூட்டினை உடைத்துக்கொண்டு வெளியே வர பொதுநன்மை கருதிய செயல்கள் உதவுகின்றன. மற்றவர்களின் நலனை முன்வைத்து சமூகத் தொண்டில் ஈடுபடும்போது "நான்" என்ற குறுகிய மனக்கூட்டிலிருந்து விடுதலை கிடைக்கிறது. இந்த விடுதலை தான் ஆத்மீக வாழ்க்கையின் முதற்படியாகம்.

அடுத்தபடி, மற்றவர்களின் நலனை முன்வைத்துச் செய்யும் சமூகத் தொண்டுகளை இறைவனுக்கு அர்ப்பணித்து செய்யும் மனோபாவமாகும்.

இந்துசமய சம்பிரதாயங்களும் சடங்குகளும் உள்மனப்பாங்கின் பிரதிபலிப்புகளாக இருத்தல் வேண்டும். உள்மனம் உலக நாட்டங்களில் மயங்கி நிற்க, வெளியில் சம்பிரதாயங்களில் பெரும் ஆரவாரத்துடன் ஈடுபடுதலிலும் பார்க்க, நான் நாஸ்திகன் என்று கூறி ஒதுங்கி நிற்பது உண்மையில் ஆத்மீகத்திற்குக் கிட்டியது என்று கூடச் சொல்லலாம்.

எனது மதிப்பிற்குரிய உயர்நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க.வி. விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு கதை சொல்வார். கங்கையில் நீராடினால் பாவங்கள் எல்லாம் நீங்கும் என்பது இந்துக்கள் நம்பிக்கை. அது மட்டுமல்ல கங்கையில் மூழ்குண்டு இறப்பவர்கள் நேராக சொர்க்கத்திற்குப் போவார்கள் என்பதும் இந்துக்கள் நம்பிக்கை. கங்கையில் ஒருநாள் ஏகப்பட்ட கூட்டம். எல்லோரும் நீரில் மூழ்கிக் குளித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஓர் இளம் பெண் நீரில் மூழ்கி ஆற்றினால் அடிபட்டு இழுத்துச்செல்லப்பட்டாள். அவள் உரத்த குரலில் "காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்" என்று கதறியும் ஓர் ஆஸ்திகன் தானும் அவளைக் காப்பாற்ற எத்தனிக்கவில்லை. கங்கையில் நீராடிப் பாவங்கள் யாவற்றையும் பறிகொடுத்தவர்கள் கூட புண்ணியம் எதனையும் சேர்க்க எத்தனிக்கவில்லை.

'அவளைக் காப்பாற்றும் போது உயிர் போனாலுங் கூட சொர்க்கத்துக்குப் போகலாமே' என்ற ஆஸ்தீக எண்ணம் அவர்களுக்கு வரவில்லை. முதல் நாள் இரவு நன்றாக மது அருந்திவிட்டு தெருவோரத்தில் விழுந்து கிடந்த நாஸ்திகன் ஒருவன் மக்களின் ஆரவாரத்தைக் கேட்டு எழுந்து பார்த்தான். பாவம்! பெண்ணொருத்தி தண்ணீரில் அடிபட்டுப் போய்க்கொண்டிருக்கிறாள். மக்கள் கூக்குரல் இடுகிறார்களே தவிர அவளைக் காப்பாற்ற எத்தனிக்கவில்லையே என்று நினைத்து உடனே நீரில் குதித்தான். பெண்ணைக் காப்பாற்றி கரை சேர்த்தான். பெண்ணின் பெற்றோர்கள் மகளை ஒருவாறு சுயநினைவு வரச் செய்துவிட்டு காப்பாற்றியவனைத் தேடினார்கள் தங்கள் நன்றியைத் தெரிவிக்க. அவனைக் காணவில்லை. எங்கோ தூரத்தில் தள்ளாடித் தள்ளாடி நடந்து போய்க்கொண்டிருந்தான். அவனுக்குக் கடவுளிலும் நம்பிக்கையில்லை; ஆன்மீகத்திலும் ஈடுபாடில்லை. சதா குடியிலேயே அவன் வாழ்க்கை சென்றுகொண்டிருந்தது. ஆனால், உள்மனம் பரிசுத்தமாக இருந்தது. மற்றவர்கள் துன்பத்தைக் கண்டு துவளக்கூடிய உளப்பாங்கு அவனுக்கு இருந்தது. தான் செய்த நல்ல காரியத்திற்கு மற்றவர்களின் பாராட்டுதல்களைக்கூட எதிர்பாராத சீரிய மனப்பக்குவம் இருந்தது. ஆனால அவன் குடிகாரன், நாஸ்திகன், ஆஸ்திகன் என்று தம்மைத்தாமே கூறிக் கொண்டவர்களிடம் சற்று திரும்பிச் செல்வோம். "அடிபட்டுச் சென்ற பெண் பிராமணத்தி - அவளுக்கு வயது 16. ஆகவே எப்படி ஓர் ஆடவன் அதுவும் பிராமணன் அல்லாதவன் அந்தப் பெண்ணைத் தொட்டு வந்து கரை சேர்க்கலாம்? இது அபச்சாரம், கடவுளுக்கே அடுக்காது. இந்தப் பெண்ணை இனி யார் தொட்டுத் தாலிகட்டுவார்கள்? சேச்சே! இவளைக் காப்பாற்றியதிலும் பார்க்க கங்கையிலேயே மூழ்கவிட்டிருக்கலாமே!" ஆஸ்திகர் சிலரின் ஆரவாரங்கள் இவை. இப்படித்தான் இன்று இந்து மதம் சென்றுகொண்டிருக்கிறது. சம்பிரதாயங்கள் முக்கியம், சடங்குகள் முக்கியம், எங்கள் குலம், கோத்திரம் முக்கியம். ஆனால் மனம் முக்கியமில்லை. இது இன்றைய இந்துநாகரிகம்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதை சொல்வார். இரு இளம் துறவிகள் ஓர் ஆற்றைக் கடக்க வந்த சமயம் ஓர் இளம் பெண் அங்கு நின்று அழுதுகொண்டிருந்தாளாம். "ஏனம்மா அழுகிறாய்?" என்று ஓர் இளந்துறவி கேட்டான். "ஆற்றைக் கடக்கமுடியவில்லை. நீர் மட்டம் எழுந்துவிட்டது. பயமாக இருக்கிறது" என்றாள் அவள். "சரி! என் தோளில் ஏறி உட்கார். நான் உன்னை அக்கரை சேர்க்கிறேன்" என்று அந்த இளம் துறவி கூறி அவளைச் சுமந்து சென்று அக்கரையில் சேர்த்துவிட்டு நடையைக் கட்டினான். தன் நண்பருடன் சேர்ந்து சுமார் ஒரு மைல் தூரம் எதுவும் பேசாமல் இருவரும் நடந்து சென்ற பின் நண்பன் கூறினானாம் "என்ன இருந்தாலும் நீ செய்தது சரியில்லை" என்று. இளம் துறவிக்குப் புரியவில்லை. "என்ன சரியில்லை?" "ஒரு இளம் பெண்ணை துறவியாகிய நீ தோளில் சுமந்து வந்தது மகாபாவம்" அதற்கு அந்த இளம் துறவி கூறினாராம். "ஓ அதுவா! நான் அவளைக் கரையில் இறக்கி வைத்துவிட்டு வந்துவிட்டேன். நீ இன்னமும் அவளை நெஞ்சில் சுமந்து வருகிறாய்" என்று.

ஆகவேதான் கூறுகிறேன் - சம்பிரதாயங்கள் அவசியம். சடங்குகள் அவசியம். சாஸ்திரங்கள் அவசியம். ஆனால், அதற்கும் மேலாக அவசியம் எங்கள தூய மனோநிலை. தூயமையற்ற மனோநிலை மற்றெல்லாவற்றையும் பாழாக்கிவிடும். ஒரு பாலகுடத்திற்கு ஒரு சொட்டு விஷம் போல.

கண்ணப்பநாயனார் சரித்திரம் சடங்குகள் பிறழ்ந்த ஆனால் உள்ளன்பு மேலோங்கிய வேடனின் சரித்திரம். சிவகோசரியார் உள்ளன்போடு முறையான சடங்குகளைச் செய்து இறைதரிசனம் பெற்றார். கண்ணப்பரோ இந்து மதத்தில் குறிப்பிட்டுச் சொல்லாத காரியங்களைச் செய்தும் கூட இறைவனின் சிந்தையில் புகுந்துவிட்டார். "அன்பே சிவம்" என்ற சைவசமயக் கோட்பாட்டின் உன்னதத்தை உலகறியச் செய்தவர் கண்ணப்பநாயனார். அளவில்லாத அன்பு, நம்பிக்கை - இவை மட்டுந்தான் கண்ணப்பநாயனாரின் ஆத்மீக அஸ்திரங்கள். அவற்றை வைத்து இறைவனையே தம்முடன் கொண்டு வந்துவிட்டார் அந்த மகானுபாவர். அன்புதான் சடங்குகளை அர்த்தபுஷ்டி உள்ளன வாக்குகிறது. பக்திதான் அனுஷ்டானங்களை பயனுள்ளவை ஆக்குகிறது. அகந்தையைக் களைந்து அன்பை அதன் இடத்தில் உள்ளீடு செய்து கொண்டோமானால் உல்கம் உய்யும்; ஆன்மீகம் வெல்லும்; மதங்கள் மேலோங்கும்; சமய வாழ்க்கை செழிப்புறும்.

அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜனாதிபதியான யோன்எவ்கென்னடி அவர்கள் ஒரு சமயம் தான் பலவாறு கேள்விப்பட்ட பகவத்கீதையின் சாராம்சத்தை விரைவாக - சுருக்கமாக - தனக்கு விளக்கிக் கூற முடியுமா என அப்போதைய இந்திய ஜனாதிபதி டாக்டர்.சர்வபிள்ளை இராதா கிருஷ்ணனிடம் வினாவியபோது, "கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே" என்பதை அவர் தனக்கே உரிய கம்பீரமான குரலில் ஆறே சொற்களில் "DO YOUR DUTY, WITHOUT EXPECTATION OF REWARD" என இரத்தினச் சுருக்கமாக பதில் அளித்த நிகழ்வை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்வது சாலவும் பொருந்தும் என எண்ணுகிறேன்.

ஆறுமுக நாவலர் சைவத்திற்கும தமிழுக்கும் இடையே ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியின் பலாபலனாக பல தருமவான்கள் தத்தம் ஊர்களில் சைவப் பாடசாலைகளை நிறுவினர். ஆயினும், பாடசாலைகள் அரசினால் தேசிய மயமாக்கப்பட்டு எல்லாப் பாடசாலைகளிலும் ஒரேவிதமான பாடவிதானங்கள் நடைமுறைக்கு வந்த பின், சமயப் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு பாடசாலைகளிலிருந்து பிறிதோர் வகை நிறுவனமொன்றுக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டுமாயினும், அது நடைபெறவில்லை. அதன் பலாபலனை இந்து சமுதாயம் இப்போது அனுபவிக்கின்றது போல் தோன்றுகிறது. நீதிமன்றங்களின் முன் ஆலயங்கள் சம்பந்தமாக வந்து கொண்டிருக்கும் வழக்குகளின் எண்ணிக்கைகளையும், இன்று இந்துசமய கலாசாரங்கள் சீரழிந்து கொண்டு போவதையும் எவரும் இலகுவில் புறக்கணிக்க முடியாது எனக் கருதுகிறேன்.

எனவே, இந்துசமய கலாசாரங்களை சீரழிவிலிருந்து மீட்கவும் -

இந்துசமய சம்பிரதாயங்களையும், சடங்குகளையும் மனித வாழ்க்கையில் அர்த்தமுள்ளதாக்கவும், ஆத்மீகம் வளர்ச்சியடையவும் -

சமய குருமார்கள், சைவ ஆலய அறங்காவலர்கள், அடியார்கள் அனைவரும் அகங்காரத்தையும், ஆணவத்தையும், சுயனலத்தையும் மனதிலிருந்து வெளியேற்றி, மனமாற்றம் பெற்று தனக்கென எதையும் நோக்காது பிறர் நன்மைக்கென நோக்கும் அன்பு வழியில் பணியாற்றிடவும் - இந்துமத நிறுவனமொன்று உடனடியாக உருவாக்கப்படவேண்டியது அவசியமாகும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-152)

# சைவ உணர்வில் யாழ்ப்பாணம் தமிழகத்துக்குக் குறைந்ததில்லை

## சைவ மாநாட்டில் அறிஞர்கள் பாராட்டு

"நான் இளமையில் யாழ்.வந்தபோது சைவத்தின் நிலை மேலோங்கி இருந்தது. இன்று அதே சைவப்பற்றையும், மக்களின் அதீத ஈடுபாட்டையும் காணக்கூடியதாக உள்ளது. 33 வருடகால ஓட்டம் சைவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாத நிலைகண்டு மகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாணம் சைவ உணர்வில் எவ்விதத்திலும் தமிழகத்துக்குக் குறைந்ததல்ல."

- இவ்வாறு கடந்த வெள்ளியன்று நல்லை ஆதீனத்தில் ஆரம்பமான சைவ மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வுகளில் உரையாற்றிய சென்னை லயோலாக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் அ.பாலறாவாயன் தெரிவித்தார்.

'யாழ்ப்பாணத்தின் நிலைப்பாடுகள் பற்றி அவ்வப்போது அறிந்து கொள்கிறோம். மிகுந்த இடர்நிறைந்த காலப் பகுதியிலும் மக்களின் சைவ உணர்வையும் பற்றையும் பார்க்கும்போது யாழ்ப்பாணம் எவ்வகையிலும் தமிழகத்திற்கு குறைந்தது இல்லை' என்று அவர் குறிப்பிட்டார்.

சென்னைப் பல்கலைக்கழக தத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா. கோபாலகிருஷ்ணன் உரையாற்றும் போது -

'சைவம் வலிமையானது அழியாதது. சோதனை - வேதனை - சாதனை மூலமே இறைவனின் ஆட் கொள்ளல் நிகழ்கிறது. இன்று மக்களின் பங்குவமின்மையே சமய சாஸ்திரங்கள் மீதான சர்ச்சைகளுக்கு காரணம்.

'அனைவரும் புரிந்து கொள்ளும் தத்துவக் கருத்துக்களைக் கொண்ட சைவத்தை நோக்கி மக்களை வழிப்படுத்துவோர் இன்று குறைந்து கொண்டே வருகின்றனர்.

பிற உயிர்களுக்கு துன்பம் வரும் போது அனைவரது உள்ளங்களும் துடிக்க வேண்டும். அத்தகைய செயல்களே சைவத்தை வளர்க்கும். சிந்தனை மூலம் சித்தாந்தத்தை புரிந்து குழப்பங்களைத் தீர்க்கலாம். சிவ நெறியே முத்திக்குரிய நெறி.

பல இடர்களை அனுபவித்த இந்நாட்டில் மேன்மை கொள்ளத்தக்க விடயங்களடங்கிய சைவத்திற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் குறித்து மகிழ்வடைகின்றேன்' என்று அவர் தெரிவித்தார். கொழும்பு இராமகிருஷ்ண மிஷனை சேர்ந்த சுவாமி ஆத்ம கனாநந்தா தனது ஆசியுரையில் -

'கடுமையான சவால்கள் நிறைந்த யாழ்ப்பாணத்தில் இம் மாநாட்டு நிகழ்வு இந்து சமயத்தின் பெருமையை உணர்த்துகின்றது.

'சமய, சமூக மேம்பாட்டிற்காக தடைகளை நீக்கி செயற்படுவதுடன் எதையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும்' - என்றார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசார்ய சுவாமிகள் வழங்கிய ஆசியுரையில் -

'சைவம், தமிழ் மீதான தாக்கத்தை நீக்கி, அவற்றை மேம்படுத்தவே தமிழக அறிஞர்கள் இங்கு வருகை தந்துள்ளனர். எமது நாடு இன்று எதிர்நோக்கும் சமய, சமூக, தேச இன்னல்களுக்கு உலக நாடுகள் குரல் கொடுத்தே அவற்றை பெற்றுத் தர முடியும்' - என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் மேலும் பல சமயபெரியோர்களின் ஆசியுரைகளும் சான்றோரின் உரைகளும் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.(ஒ-13)

## செய்தித் துளிகள்

தென்மராட்சி,மே5

வடமராட்சிக் கடலில் திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய பகுதி மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்து வருவதாக இப்பகுதி கடற்றொழிலாளர்கள் வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் முறையிட்டுள்ளனர்.

சமாசத்தினர் இவ்விடயம் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினரிடம் முறையிடவுள்ளதாக சமாசப் பிரதிநிதி எஸ்.சூரியமூர்த்தி தெரிவித்தார். (ஒ-117)

★ ★ ★

பளை பனை, தென்னைவள அபிவிருத்திச் சங்கத்தின் தலைமை அலுவலக உப அலுவலகம் நேற்று முன்தினம் பளை தம்பகாமத்தில் உள்ள தனியார் கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைமை அலுவலகக் கட்டடம் சேதமடைந்துள்ளதால் புனரமைப்பு செய்யப்படும் வரை தலைமை அலுவலகம் புலோலி கிராமக் கோட்டடியில் தற்காலிகமாக இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

★ ★ ★

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணி அலுவலகம் மீண்டும் கொடிகாமத்தில் நேற்றுமுன்தினம் முதல் இயங்கிவருகிறது.

புலோலி கிராமக் கோட்டடியில் இயங்கி வந்த இந்த அலுவலகத்தினை மீண்டும் சொந்த இடத்தில் இயங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து அலுவலகம் கொடிகாமத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அச்சுவேலியில் இயங்கிவரும் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்க தலைமை அலுவலகம் அடுத்த வாரம சாவகச்சேரியில் மீள இயங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் சில தவறணைகள் சொந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

★ ★ ★

பளைப் பிரதேசத்தில் இயங்கிய அனைத்து அரச, உள்ளூராட்சி, கூட்டுறவு நிறுவனங்களையும் உடனடியாக மீள ஆரம்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட பொது நிர்வாகப் பிரிவினர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த இரண்டாம் திகதி நடைபெற்ற பளைப் பிரதேச நிறுவனங்களின் [illegible]வர்கள், பிரதேச செயலர், கிராம அ[illegible]வர்கள் ஆகியோருடன் நடந்த [illegible]லையடுத்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் இயங்கிய அனைத்து நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் ஆஸ்பத்திரி ஆகியவை சொந்தக் கட்டடத்தில் இயங்கமுடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதால், தற்காலிகமாக தனியார் கட்டடங்களில் இயங்குமாறும் -

பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் - சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-117)

★ ★ ★

ஏ-9 வீதி திறக்கப்பட்டதையடுத்து கண்டி வீதியில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், பளைப் பகுதியில் மூடப்பட்டுள்ள எரிபொருள் நிலையத்தினை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஒ-117)



நெல்லியடி சனசமூக நிலையம் நடத்திய பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், சங்கீத பூஷணம் செல்வி சரோஜா தம்பிக்கு 'இசைவாணி' பட்டம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(வடமராட்சி செய்தியாளர்)

## கைத்தொழில் வணிகர் மன்றம், மீசாலை

# முக்கிய அறிவித்தல்

எமது சங்க எல்லைக்குட்பட்ட புதிய, பழைய அங்கத்தவர்கள் அனைவரும் எதிர்வரும் 10-05-2002ஆம் திகதிக்குள் பிரதேச செயலரால் வழங்கப்பட்ட படிவத்தைப் பூர்த்திசெய்து தரும்படி கேட்டுக் கொள்கின்றோம். தவறின் அதனால் வரும் அசௌகரியங்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகளல்லர்.

*கைத்தொழில் வணிகர் மன்றம்,*
*மீசாலை.* (3474) - செயலாளர்.

# மரண அறிவித்தல்கள்

## கண. ஜீவகாருண்யம் (B.A.)

*(நிறைவேற்று அதிகாரியும் உதவி முகாமையாளரும் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை, காரைநகர் சாலை, முன்னாள் கிளிநொச்சிச் சாலை ஊழியரும், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளரின் P.A.யும்)*

காம் வீதி, ஊர்காவற்றுறை அமரர் சபாபதி கணபதியின் அன்பு மகனும், ஜெயரட்ணத்தின் அன்புக் கணவருமாகிய கணபதி ஜீவகாருண்யம் (ஜீவா) அவர்கள் 28.04.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-05-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு 187, கஸ்தூரியார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*187, கஸ்தூரியார் வீதி,* ச.பசுபதி (சிறிய தந்தை)
*யாழ்ப்பாணம்.* (3482) க.இராஜகோபால் (சகோதரன்)

## திருமதி பரமசாமி கனகம்மா *(அரியாலை)*

அரியாலையைச் சேர்ந்த திருமதி பரமசாமி கனகம்மா நேற்று (04-05-2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பரமசாமியின் அன்பு மனைவியும் கனகேஸ்வரி (ஓய்வூதியர், யாழ்.போதனா வைத்தியசாலை), கமலாம்பிகை, துரை அண்ணர் என அழைக்கப்படும் துரைராஜா (சுபாஸ், கல்யாணி கிறீம் ஹவுஸ், குளிர்சாதன திருத்துநர்), நடராசா (வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), புண்ணியம் என அழைக்கப்படும் தர்மகுலசிங்கம் (ஓய்வூதியர், யாழ்.போதனா வைத்தியசாலை), அருளம்பலம் (இலங்கை மின்சார சபை), சரோஜினிதேவி சகாதேவன், செல்வராணி மோகனரஞ்சிதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் புறுவாஸ் என அழைக்கப்பட்ட காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற இராசா, தேவகி (ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர், தொலைக்கல்வி உப அதிபர், யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), இந்திராவதி, புஸ்பேஸ்வரி (ஓய்வூதியர், யாழ்.போதனா வைத்தியசாலை), புஸ்பராணி, சகாதேவன், எஸ்.எம்.ரஞ்சன் என அழைக்கப்படும் மோகனரஞ்சிதன் (யாழ்.செயலகப் புனர்வாழ்வுப் பகுதிக் களஞ்சியம்), சற்குணவதி செல்லத்துரை, நித்தியானந்தன் (மலேரியாத் தடுப்பு இயக்கம்), சோதிலிங்கம், மகேந்திரன் ஆகியோரின் மாமியாரும் சிவயோகம் கனகரத்தினத்தின் சகோதரியும் மகேஸ்வரி செல்வரத்தினத்தின் மைத்துனியும் நகுலேஸ்வரன், யோகேஸ்வரி கிரிதரன், தவராசா (யாழ்.ரெலிகொம்) ஆகியோரின் பெரிய தாயாரும் நந்தினிதேவி தவராசா, மோகினி கணேஷ்வரன், ஸ்கந்தராசா, பால்ராஜ், மதனராஜ் (கல்யாணி கிறீம் ஹவுஸ்), கோகிலன், சர்மிளா, மிராஜினி, தனுஷ்காந்த், யனுஷா, சருண்காந்த் ஆகியோரின் பேர்த்தியாரும் பரணிகாந்த், சரணிகாந்த், தரணிகாந்த், அபிசானா, ருசானா, கங்கையா, வைகையா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 163/2, கண்டி வீதி, சின்னக் கிணற்றடி ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று (05-05-2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*163/2, கண்டி வீதி,* தகவல்: துரை
*சின்னக் கிணற்றடி ஒழுங்கை,* (கல்யாணி கிறீம் ஹவுஸ்)
*அரியாலை.* (குளிர்சாதனப் பெட்டி திருத்துநர்)
(3481)

## திருமதி கனகாம்பிகை அருணாசலம்

*(இராசா, வேலணை)*

வேலணையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை அருணாசலம் நேற்று (04-05-2002) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - நாகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் நயினாதீவு தியாகர் அருணாசலம் (முன்னாள் வெள்ளி விலாஸ் உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் தியாகர் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வரதலிங்கம் (முன்னாள் அதிபர், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்), தவமணிதேவி (கனடா) அவர்களின் பாசமிகு சகோதரியும் ஜெயமலர் (விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி), மைதிலி (வைத்திய கலாநிதி, யாழ்.போதனா வைத்தியசாலை), மனோரமா (தபால் திணைக்களம்), மாலதி (இலங்கை மின்சாரசபை), மஞ்சுளா (ஆசிரியை - திருகோணமலை), மகபதி (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தாயாரும் தியாகலிங்கம் (உப அதிபர், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), அருளேந்திரன் (வைத்திய கலாநிதி - யாழ். போதனா வைத்தியசாலை), ஶ்ரீரங்கநாதன் (ஆசிரியர் - திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியும், இளையதம்பி, சுப்பிரமணியம் (வேலணை) அவர்களின் மருமகளும் சரஸ்வதி (லண்டன்), கனகராசா (கனடா), காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசம்மா, காங்கேசு, வாலாம்பிகை மற்றும் சாமிநாதன், மீனாட்சி, விசாலாட்சி, திருநாவுக்கரசு (சட்டத்தரணி) ஆகியோர்களின் அன்பு மைத்துனியும் ஆரணி, தியாசாயினி, மயூரசாகித்தியன், பிரதாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-05-2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*117/4, அரசடி வீதி,* தகவல்:
*கந்தர்மடம்.* தி.அருணாசலம்
(3485) (கணவர்)

## சமய சந்நிதியில்

வலிகாமம்தெற்கு,மே5

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் நாளை திங்கட்கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினம் கொண்டாடப்படவுள்ளது.

திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு உடுவில ஸ்ரீ பெரியநாயகி அம்பாள் ஆலயத்தில் குருபூசை தொடர்பான விசேட பூசைகள், வழிபாடுகள் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து 'திருமுறையும் பாராயணமும்' என்ற விடயம் பற்றி ஓதுவார் க.சண்முகராஜாவினால் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்படும். (ம-152)

☆ ☆ ☆

மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் இரு மண்டல கந்தபுராணப் படிப்பு நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டில் சமாதானமும், அமைதியும் ஏற்பட 90 நாள்களுக்கு இந்தக் கந்தபுராணம் படிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. (ம-117)

☆ ☆ ☆

கோப்பாய்,மே5

கோப்பாய் சத்திய சாயி சமித்தியில் ஈஸ்வரம்பாள்தின விசேட பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும். பாலவிகாஷ் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-72)

☆ ☆ ☆

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி இந்து மன்றத்தினால் அனுட்டிக்கப்பட்டுவரும் 63 நாயன்மார் குருபூசை வரிசையில் நாளை திங்கட்கிழமை அப்பர் சுவாமிகள் குருபூசை கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு சோமஸ்கந்தர் ஆலயத்தில் விசேட பூசைகள் மற்றும் பிரார்த்தனை உரை என்பன இடம்பெறவுள்ளன.(ம-72)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை திங்கட்கிழமை காலை 8மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு அருகில் உள்ள வியைாட்டுத் திடலில் ஆரம்பமாகவுள்ளது என்று யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-10)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களிற்குமிடையிலான தடகளப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு மருத்துவபீட மைதானத்தில் விளையாட்டு அவைத் தலைவர் கே.சிவகுமார் தலைமையில் நடைபெறுகின்றது. யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி எஸ்.இராசதுரை பிரதமவிருந்தினராக கலந்துசிறப்பிக்கவுள்ளார்.(ம-ரி)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே5

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 9ஆம் திகதி ஏ.ஆர்.வி.தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுளளது.

அன்றையதினம் காலை 9 மணி முதல் 10.30 மணிவரை வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி முன்பாகவுள்ள நவீன சந்தைக் கட்டடத்திலும் காலை 11 மணிமுதல் 12.30 மணிவரை வட்டுக்கோட்டை மிருக வைத்திய நிலையத்திலும், பிற்பகல் 1 மணிமுதல் 2 மணிவரை வட்டுக்கோட்டை மூளாய் வீதி மாதர் சங்கத்திலும், பிற்பகல் 2.30 மணியிலிருந்து 3.30மணிவரை சித்தன்கேணி வட்டு.இந்துக் கல்லூரியிலும் வைத்து நான்கு பிரிவுகளாக இந்தத் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

இப்பிரிவைச் சேர்ந்த அனைவரும் தமக்கு அண்மையிலுள்ள நிலையங்களுக்குச் சென்று தமது வளர்ப்பு நாய்களுக்கு தவறாது தடுப்பு மருந்தை ஏற்றிக்கொள்ளுமாறு அப்பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ச. பரமேஸ்வரனால் கோரப்பட்டுள்ளது. (ம-15)

## புலிகளின் கோட்டச் செயலகம் நாளை திறப்பு!

தென்மராட்சி,மே5

விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியற்துறையினரின் கோட்டச் செயலகம் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடி வதிரியில் திறக்கப்படுமென வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் 'தயா அறிவித்துள்ளார்.(ம-117)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை நல்லம்மா

வேலணை பல்லம்புலத்தைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது இல.495, யோகபுரம் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நல்லம்மா அவர்கள் நேற்று (04.05.2002) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் (சிவம்) அவர்களின் அன்புத் தாயாரும் பூமதியின் அன்பு மாமியாரும் கோபிநாத், சிந்துயன், ஜெயசுசன், ஆசிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் பூலோகநாதன், சிவலோகநாதன் ஆகியோரின் சிறியதாயாரும் அன்னபூரணம் (திருகோணமலை), இராசமணி, திருநாவுக்கரசு ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அனுச்சியம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*495,யோகபுரம்,* சிவசுப்பிரமணியம் (சிவம்)
*மல்லாவி.* (3477) (மகன்)

## தம்பிஜயா குமாரசாமி J.P.

வேலணை கிழக்கைச் சேர்ந்தவரும் கொக்குவில் கிழக்கு மருத்துவபீட முகரியை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பிஜயா குமாரசாமி (சமாதான நீதிவான்) நேற்று (04.05.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிஜயா - செல்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பொன்னம்மாவின் அன்பு மருமகனும் சோதிமலரின் அன்புக் கணவரும் அனித்தாவின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கொக்குவில் கிழக்கு,* கு.சோதிமலர்
*கொக்குவில்.* (3476) (மனைவி)

## திருமதி மரியமுத்து பூவிலிங்கம் (மணி)

(இளைப்பாறிய உப அதிபர் - யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம், ஆசிரியை - கொழும்பு விவேகானந்தா மகாவித்தி., யா/வேம்படி மகளிர் கல்லூரி, யா/முத்துத்தம்பி மகா வித்தி.)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல.85 தேவாலய வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியமுத்து பூவிலிங்கம் நேற்று (04-05-2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜனவாரிஸ் எஸ்வேனிக்கம் தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பூவிலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், களுத்துறை, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் சந்திரவதனா (லிகிதர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்.), ந.வனஜா (பிரான்ஸ்), வனிதா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்.பிரதேச செயலகம்), வளர்மதி, ஜெயவதனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் க.நசந்தன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமியாரும் வைதிகா, றொசந்தராஜன் (பிரான்ஸ்), டினேஸ், டெரிக், ஜக்குலின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிறிஸ்டி ஜோய், கலிஸ்ரா ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் இராசையா (இளைப்பாறிய பொறியியலாளர்), பாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியை), இராசரத்தினம், சிவஞானம் (C.T.B. போமன், வவுனியா), பரமேஸ்வரி (உப அதிபர்), பரமானந்தம், பாலச்சந்திரன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சங்கரப்பிள்ளை, அன்ரனி ஸ்ராலின், ஸ்ரனிஸ்லஸ், கொலற், டானியல், காலஞ்சென்ற மேரி யஸிந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிவயோகம் (யோகம்மா) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05-05-2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 (புதிய நேரம்) மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.85, தேவாலய வீதி,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* (3479) பூ.சந்திரவதனா (மகள்)

## கந்தசாமி தினேஷ்

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தசாமி ஆச்சாரியார் - சிந்தாதேவி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் தினேஷ் கனடாவில் அகால மரணமானார்.

இவர் கோகிலவாணி, ரமேஷ் (கனடா), சதீஷ், றதீஷ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிறிகாந்தனின் அருமை மைத்துனரும் தேனுஜனின் ஆசை மாமாவும் காலஞ்சென்ற பிரபல சிற்பாச்சாரியார் ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதிகளினதும், சின்னராசா ஆச்சாரியார் - வாலாம்பிகை தம்பதிகளினதும் பாசமிகு பேரனுமாவார்.

மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அரசடி ஒழுங்கை,* ஸ்தபதி ஆ.கந்தசாமி ஆச்சாரியார்
*திருநெல்வேலி கிழக்கு.* (3478) (தந்தையார்)

## நாகலிங்கம் சரவணபவானந்தன்

(Rtd. Additional G.Manager, People's Bank)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், ஐயனார்கோயிலடி, இல.1, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை; யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சரவணபவானந்தன் (N.S.P. ஆனந்தன்) 03.05.2002 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பு - தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி தனலட்சுமி கதிரவேற்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரனும் Dr.பிரியதர்ஷினி, தயாபரன், அர்ச்சுனா (கனடா), Dr.அஜந்தா ஞானபாஸ்கரன் (நியூஸிலாந்து), சத்தியநாராயணா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் Dr.கு.தயாபரன், திருமதி அ.ராதிக்கா (கனடா), Dr.த.ஞானபாஸ்கரன் (நியூஸிலாந்து), திருமதி த.சாந்தி ஆகியோரின் அருமை மாமனாரும் த.கிருஷ்ணி, த.செந்தூரன், ஞா.அஷ்வின், ஞா.ஷோபிதா ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2002) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*14,Chelsea Garden,* மனைவி, பிள்ளைகள்,
*Colpitty.* T.P:- 565070 (C/22030) மருமக்கள்.

# நீர்கொழும்பு சிறைக் கைதிகள் உண்ணாவிரதம் தொடர்கிறது

கொழும்பு,மே5

புதிய குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த இவர்கள் தமது கோரிக்கைகளுக்கு நியாயமான பதில் கிடைக்கும்வரை போராட்டத்தைத் தொடரப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

இதேவேளை -

தம்மீதான விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும் அல்லது தம்மை விடுவிக்க வேண்டும் என்று கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த அனுராதபுரம் சிறைக் கைதிகள் நேற்றுத் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

சிறைச்சாலை அதிகாரிகளின் உறுதிமொழியையடுத்தே தமது போராட்டத்தைக் கைவிட்டதாகவும் -

அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாவிட்டால் விரைவில் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் -

அவர்கள் தெரிவித்தனர். (ம-4)

சைக்கிள், மரதன் ஓட்டம்

# மாகாணப் போட்டிக்கு இங்கிருந்து 40 வீரர்கள்

வலி.வடக்கு,மே5

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாணமட்ட மரதன ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போடடிகளில் பங்குகொள்வதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 40 வீர வீராங்கனைகள் திருமலை செல்லவுள்ளனர்.

சைக்கிள் ஓட்டப் போட்டியில் ஆண், பெண் பிரிவுகளில் தலா பத்துப் பேர் வீதம் 20 பேரும் மரதன் ஓட்டப் போட்டிக்கு ஆண், பெண் பிரிவுகளில் பத்துப் பேர் வீதம் இருபது பேரும் அடுத்த வாரம் திருமலை செல்கின்றனர்.

நீண்ட காலத்தின் பின்னர் தரைப் பாதை திறக்கப்பட்டதால் அதிக எண்ணிக்கையான வீர வீராங்கனைகள் யாழ். மாவட்டத்தில் இருந்து மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம-86)

# அரசு - புலிகள் பேச்சை பொறுத்தே சர்வதேச நிதி உதவிகள் கிடைக்கும்

## ஐ.நா. அதிகாரி தெரிவிப்பு

சமாதானத்தை உறுதிப்படுத்தும் வரையும் இலங்கைக்கான சர்வதேச உதவிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருப்பதாக ஐ.நாவின் இலங்கைக்கான ஒருங்கிணைப் பாளர் மைக்கல் சேமோ தெரிவித்திருக்கின்றார்.

அரசு, விடுதலைப் புலிகளுடன் நடத்தவிருக்கும் பேச்சுக்களின் முடிவுகளைப் பொறுத்தே சர்வதேச நாடுகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தமது உதவிகளை மீண்டும் வழங்குவது குறித்து முடிவு செய்யும் எனவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப் பணிகள் மற்றும் கண்ணிவெடி அகற்றுதல் என்பவற்றுக்கு ஐ.நா. சைப முக்கிய இடம் அளிக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-4)

# 90 சத வீதமான இலங்கையர்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர்

கொழும்பு,மே5

இலங்கையில் சுமார் 90 வீதமான மக்கள் சமாதானத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். சமாதானத்தை எதிர்க்கும் சக்திகள் இதனை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐ.நாவின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் எட்வேட் வோட்டஸ்.

அண்மையில் இலங்கைக்குத் தனது குழுவினருடன் விஜயம் செய்த அவர் நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று மக்களுடன் கலந்துரையாடிய பின்னரே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்று அனேகமான இலங்கையர்கள் விருப்பம் கொண்டிருந்தனர். தற்போதைய சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை அவர்களிடம் ஏற்பட்டிருக்கிறது.

சமாதானத்தை எதிர்க்கும் சில சக்திகளும் இலங்கையில் உள்ளன. அவர்கள் மக்களின் விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் கருத்தில் கொண்டு சமாதானத்துக்காக உழைக்க வேண்டும்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# உரிமைகளை வழங்க மறுத்ததாலேயே தமிழர்கள் நாட்டைப் பிரிக்க முற்பட்டனர்

## அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க கூறுகின்றார்

கொழும்பு,மே5

தமிழ் மக்களுக்கான உரிமைகளை சிங்களத் தலைவர்கள் வழங்கத் தவறியமையாலேயே தமிழ் இளைஞர்கள் நாட்டைப் பிரிக்க முற்பட்டார்கள்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க.

சமாதான முயற்சிகள் குறித்து ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு விளக்குவதற்காக நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்கி, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அவர்களுக்கு சுயநிர்ணய உரிமைகளை வழங்குவதற்குத் தான் முழு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக ஜே.வி.பியின் மறைந்த தலைவர் ரோஹண விஜேவீர கூறிவந்தார்.

ஆனால், இன்றைய ஜே.வி.பியினர் தமிழ் மக்களுக்கு எதிரான கடும்போக்கைக் கடைப்பிடித்துவருகிறார்கள்.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியன குழம்புவதற்கு இனவாத சக்திகளே காரணமாகும்.

இனவாதப் போக்குள்ள கட்சிகளின் சகல பிரசாரங்களையும் முறியடிக்க அனைத்து மக்களும் தயாராக இருக்க வேண்டும்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம4)

# இயேசுவை அறிந்துகொள்ளும் அறிவே மெய்ஞ்ஞானமாகின்றது

இயேசுவை நாம் முழுமையாக அறிந்துகொள்ள வேண்டும். இயேசுவை அறிந்துகொள்ளும் அறிவே மெய்ஞ்ஞானம் ஆகிறது.

எம்மைப் பொறுத்தமட்டில் அவருடைய பிறப்பு மிக முக்கியமானது. இயேசு சரித்திரத்தில் புகுந்தார்; பிறந்தார்; வாழ்ந்தார்; இறந்தார்; பின் உயிர்த்தெழுந்தார்.

இவை மனித சரித்திரத்தில் இடம பெற்றவை. வரலாற்றுப் பெருமை மிக்கவை.

இவை வெறும் சரித்திர நிகழ்சசிகள் மட்டுமே அல்ல.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் தான் இயேசு இருந்தார் என நினைபபது பெருந்தவறு. அவரை நாம் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என்று தான் அழைக்க வேண்டும். இதுதான் பொருத்தமும் கூட.

"கர்த்தர்" என்ற சொல்லுக்கு "ஆள்பவர்" என்ற பொருளைக் கொளளலாம். "ஆண்டவர்" என்ற வார்த்தையையும் சொல்லலாம். "இயேசு" என்ற சொல் "இரட்சகர்" எனும் கருத்தைக் கொள்கிறது.

"யொசுவா" என்பது எபிரேய மொழி. இந்த மொழியின் மொழி பெயர்ப்பே "இயேசு" என்றாகிவிட்டது.

"கிறிஸ்து" என்றால் "அபிஷேகம்" என்பது பொருள். இதனை எபிரேய மொழியில் "மேசியா" என்று சொல்வார்கள். இதுவே பின்பு கிரேகக மொழியில் "கிறிஸ்து" என்றாகிவிட்டது.

"இயேசு" என்ற இந்த நாமத்தை மனிதனான இயேசுவுடன் இணைத்தாலும், இயேசு விண்ணில் இருந்து வந்தவர். இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர். இதனை அவரதுபட்டமான "கிறிஸ்து" என்பது குறிப்பிடுகிறது.

முன்பு இயேசு கிறிஸ்து வார்த்தையாக இருந்தார். அநாதி தேவனாக இருந்தார். தேவனோடு இருந்தவர், "தேவனாக இருப்பவர்" என்றெல்லாம் யோவான் கூறுகின்றார்.

## ஞாயிறு நற்பிரசாதம்

சாதாரணமாக நாம், பிதாவாகிய தேவனையே "தேவன்" எனக் கூறுகின்றோம். இப்படிக் கருதினாலும் இயேசு - பிதாவோடு இருந்து கொண்டு இருக்கிறார்; தேவனாகவும் இருக்கிறார்.

படைப்பு - அல்லது வேறு எதுவாக இருந்தாலும், தேவன் - இயேசு மூலமாகவே எதனையும் செய்கின்றார்; சாதிக்கின்றார்.

படைப்பு - இரட்சிப்பு - எதிலும் - எல்லாவற்றிலும், கிறிஸ்து இயேசு மூலமாகவே தேவன் கிருபை செய்கின்றார்.

"தேவன்" என்று நாம் பிதாவைக் கூறுகின்றோம். இப்படி இயேசுவையும் கூறலாம். தேவன் மனிதனாக வேண்டிய அவசியம் வந்தது. அதனால், மனிதன் ஆனார். இயேசு - மனித சரித்திரத்தில் புகுந்தார். அதனால் மனித வாழ்வில் ஓர் ஆரம்பத்தை உடையவராக இருந்தார்.

- எலீஸா

## சத்துணவு திட்டம்

யாழ்ப்பாணம்,மே5

வட்டுக்கோட்டை செம்பாட்டான் தோட்டம் கிராமத்தில் அமைந்திருக்கும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் உள்ள ஒன்று முதல் 5 வயதுக்கு உட்பட்ட - போசாக்குக் குறைபாடுகளுள்ள - சுமார் 25 குழந்தைகளுக்கு போசாக்கு உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 3ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் தொடர்ந்து 6 மாதங்களுககு இப்பிள்ளைகளுக்குச சத்துணவு வழங்கபபடவுள்ளது. (ம-15)


## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று (05.05.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நீர்வேலி சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*- ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர்.*
நீர்வேலி.

(3486)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உப அதிபர்
திரு.சு.தியாகலிங்கம்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி கனகாம்பிகை அருணாசலம்

அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. அதிபர், ஆசிரியர்கள்.

(3484)

நாகம்ஸ் சுன்னாகம்
ரொப்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த
தமிழ் (ஈஸ்ட்)
காட்சிகள்:11.00,3.00,6.30 (புதியநேரம்)
8ஆம் திகதி முதல் கண்ணுபடப்போகுதையா
(3436)

ராஜா யாழ்ப்பாணம்
4ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக நடித்த
தமிழன்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C/21980)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், மீனா, மனோரமா, மணிவண்ணன் நடித்த
பெரியண்ணா
தினசரி காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பி.ப.)
(C-21981)


# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை

(ஓய்வூதியர் - பொலீஸ் திணைக்களம்)

கோப்பாய் தெற்கு பழைய தபாற்கந்தோர் முன் ஒழுங்கையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை நேற்று (04.05.2002) சனிக்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) கணவரும், சிறீஸ்கந்தசெல்வன் (அமைப்பாளர், யாழ்.காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), திருமதி குமாரசெல்வி, காலஞ்சென்ற திருமதி சந்திரகுமாரி, திருமதி உருத்திரகுமாரி (ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), விக்னகுமார் (லண்டன்), கௌரிகுமார் (கனடா), விஷ்ணுகுமார் (கனடா), திருமதி பாஸ்கரகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனும் திருமதி கனகாம்பிகை (யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம்), ந.அரியரட்ணம் (படவரைஞர் - யாழ். செயலகம் மற்றும் பிரதேச செயலகம், நல்லூர்), சுரேந்திரகுமார் (பொறியியலாளர்), சகுந்தலா, பாலராணி, சுகந்தி, சுதாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சி.துஸ்யந்தி (சட்டபீடம், கொழும்பு, பல்கலைக்கழகம்), சி.கஜந்தி (பேராதனை - மிருக வைத்திய ஆராய்ச்சி நிலையம்), சுண்டிக்குளி கல்லூரி மாணவிகளான சி.ஆரணி (Year8), அ.துவாரகா (Year 11), சு.மாதங்கி (Year 6), சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களான அ.ஹரிகஜன் (2001 - Bio Science), அ.ஹரிகேசன்(2004-Maths) மற்றும் வி.கிருஷ்ணா, வி.குமரன், கெ.கௌசிகன், கெ.ஜெயசிகன், கெ.ஜெயசிகா, வி. எதுர்ஷன், சு.பிரியந், சு.டிஸ்மினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய தபாற்கந்தோர் முன்ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
திருமதி செ.பாக்கியம்
(மனைவி)

(3483)

## கார்த்திகேசு பொன்னுத்துரை

மாதகலைப் பிறப்பிடமாகவும் திறாம்பையடியை வதிவிடமாகவும் சுதுமலையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பொன்னுத்துரை நேற்று (04.05.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் கலாஜோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜாவின் அன்பு மாமனாரும் சதீஸ்சன், சத்தியா, நித்தியா, சுவனியா, பாலகிருஷ்ணன் (எழுதுமட்டுவாள்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை மேற்கு,*
*பட்டினசபை ஒழுங்கை,*
*மானிப்பாய்.*

தகவல்:
சிவராஜா
(மருமகன்)

(C/22034)



வாகரையில் நடந்த சம்பவம் குறித்து கண்காணிப்புக்குழு அலுவலர் மீன வர்களிடம் விசாரணை நடத்துகிறார்.

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1996ஆம் ஆண்டுக்கு முன்னர் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது எமது சொத்துக்கள் பாதுகாப்பாக இருந்தன.

ஆனால் தற்போது அவற்றில் 95 சதவீதமான சொத்துக்கள் சூறையாடப்பட்டு விட்டன.

- என்று அவர்கள் கூறியதாகப் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது. (ம)

## பயங்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சித்தார்த்தன், ஈரோஸ் சார்பில் சங்கர்ராஜி, ஈ.பி.டி.பி.சார்பில் தவராஜா, அருள், பொ.ஐ.முன்னணி சார்பில் பத்தேகம தேரர் மற்றும் சிங்கள சட்டத்தரணிகள், பிரமுகர்கள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இதிலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த விடயங்கள் குறித்து விரைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசுவது என்றும்-

சட்டமா அதிபரைச் சந்தித்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பது என்றும் -

கலந்துரையாடலில் மேலும் முடிவு செய்யப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் 1979 ஆம் ஆண்டில் முதன்முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது 3 மாத காலத்திற்கே அது செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அது 6 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. அதன் பின்னர் இன்று வரை அந்தச்சட்டம்தொடர்ந்து வருகின்றது.

எனவே அதனை நீக்குவதில் பெரும் சிரமங்கள் எதுவும் இருக்காது என்றும் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது. (ம)

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)

## ஜூன் 11இல் பேச்சு?

அரசு - விடுதலைப் புலிகள் இடையேயான சமாதானப் பேச்சுக்கள் பெரும்பாலும் ஜூன் 11ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாகும் என நம்பப்படுவதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் சில தகவல் வெளியிட்டுள்ளன.

இப்பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை இம்மாத இறுதிக்கு முன்னர் அரசு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புகளிடம் சமாதான ஏற்பாட்டாளர் பணியைச் செய்யும் நோர்வே தரப்பு ஒப்படைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் 11ஆம் திகதிக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு விடுமா என்பது குறித்து அந்தச் செய்தி வட்டாரங்கள் தகவல் ஏதும் வெளியிடவில்லை. (உ)

## விடுதலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவடியில் வைத்து இவர்கள் திருப்பியனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.~

இதுகுறித்துத் தாம் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிடப்போவதாக புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரசாத் கூறினார். (ம)

## உடன்படிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கில் தனித் தமிழீழம் அமைக்கும் தமது எண்ணத்தை விடுதலைப் புலிகள் இன்னும் கைவிடவில்லை என்று குறிப்பிட்டு அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான சில சந்தேகங்களை கிளப்பி, பௌத்த மத பீடத்தினர் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருந்தனர் என்றும் -

அக்கடிதத்துக்குத் தாம் எழுதிய பதிலிலேயே ஜனாதிபதி தமது உத்தேச நடவடிக்கைத் திட்டம் குறித்து பிரஸ்தாபித்துள்ளார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ)

## பேரியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி அணியான பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாவர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் தொடர்ச்சியாகவே இந்தப் பிரமுகர்கள் அங்கு செல்வதாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் புதுடில்லியில் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளனர்.

தற்போது இலங்கையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டுவரும் சமாதான முன்முயற்சிகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கையிலும், தமது இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவு திரட்டும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## யுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காலப்பகுதியில் சுமார் ஐந்து ஆண்டுகள் கண்ணுக்கெட்டிய தொலை வில் இருந்த யாழ்ப்பாண நகரத்தை பண்ணைப் பாலத்திற்கு ஊடாக கடந்துவர முடியாத இக்கட்டுக்குள் தீவக மக்கள் வாழ்ந்தனர். போக்கு வரத்து வசதிகள்கூட இல்லாமல் தனித்துவிடப்பட்டிருந்த தீவக மக்களுக்கு கடல்வழி பயண ஒழுங்குகளை மேற்கொண்டும், தேவையான நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுத்தும், ஈ.பி.டி.பியும் கடற்படையினரும் பெரும் தொண்டாற்றி வந்துள்ளனர். இதனை இங்கு வாழ்ந்த மக்களும், உலகமும் நன்கறியும்.

இந்த நிலையில் தற்போது குடாநாட்டுக்கு வந்துள்ள புலிகள் தமது அரசியல் செல்வாக்குத் தளத்தை தீவகப் பகுதிக்குள் விரிவுபடுத்துவதற்கான மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாமை காரணமாக ஈபிடிபி மீது அபாண்டமாக பழி சுமத்த முற்பட்டுள்ளனர். ஆள்கடத்தல், சித்திரவதை, பணம்பறிப்பு போன்ற செயல்களில் ஈ.பி.டி.பி. எந்தக் காலத்திலும் ஈடுபட்டதில்லை; ஈடுபடப்போவதும் இல்லை. இதனை மக்கள் நன்கறிவர். அத்துடன் இத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் யார் என்பதும் மக்களால் நன்கு உணரப்பட்டதாகும்.

படையணிகளுக்கு ஆள்திரட்டல் என்றும், நிர்வாகச் செலவீனங்களுக்கான வரி வசூலிப்பு என்றும், அரசியல் பணிகளை மேற்கொண்டுள்ளவர்கள் யார் என்பதும் தெளிவாகத் தெரிந்த ஒன்றாகும்.

ஈ.பி.டி.பி. இத்தகைய செயல்களில் ஈடுபட்டிருந்தது என்பது எந்த விதமான ஆதாரமும் அற்ற வெறும் சோடனைகளாகும். இவை குறித்து யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு கூறப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்ற போதும் இது பற்றி இக்குழுவிடம் இருந்து எமக்கு இதுவரை எதுவித அறிவிப்பும் கிடைக்கப்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கட்டுநாயக்கா தாக்குதல்:

# மனித உரிமைகள் மீறல் மனு 16 கைதிகள் தாக்கல் செய்வர்

கட்டுநாயக்கா விமான நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீர் கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 16 கைதிகளும் தாங்கள் சட்ட விரோதமான முறையில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிதது மனித உரிமை மீறல் மனு ஒன்றினைத் தாக்கல் செயயவுள்ளனர்.

இதற்கென மனித உரிமை அமைப்புக்களைச் சேர்ந்த சட்டத்தரணிகளின் உதவிகளை இவர்கள் நாடியிருக்கின்றனர் என்று கூறப்பட்டது. கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்கள் இதுவரை விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டார்கள், மற்றும் அந்த இலக்கத்திலிருந்து தொடர்புகொள்ளப்பட்டார்கள் என இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. (ம-4)

## கடற்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் கடந்த 28ஆம் திகதி தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக திருமலையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது நால்வர் கைது செய்யப்பட்டமை ஆகிய சம்பவங்களைக் கண்டித்து நூற்றுக்கணக்கான நிலாவெளி வாசிகள் திருகோணமலை யிலுள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்துக்கு ஊர்வலமாகச் சென்றனர். அங்கு மகஜர் ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்.

இந்த மகஜரின் பிரதி ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. (ம-4)

## சமாதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"உங்களது உத்தேச இந்திய விஜயத்தின்போது தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நீங்கள் சந்திக்க இருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்போது, தற்போதைய சமாதானப் பேச்சுகள் குறித்தும், பிரபாகரனை நாடு கடத்தக் கோரும் தீர்மானம் குறித்தும் அவருடன் பேசுவீர்களா?" - என்று இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் பிரதமரிடம் கேள்வி எழுப்பியதாகக் கூறப்படுகின்றது.

"ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசுவேன். அது மரியாதை நிமித்தமான சந்திப்பு. அவ்வளவே.

"நாம் தற்போது புலிகளுடன் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து ஜெயலலிதாவுடன் பேசவேண்டிய பொறுப்பு - கடமை - எனக்கு இல்லை.

அதேபோன்றதே பிரபாகரன் விடயமும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இலங்கையைக் கோரும்படி மத்திய அரசிடம் தமிழக அரசு வேண்டுகோள் விடுக்கலாம். அது அந்த நாட்டின் மத்திய அரசுக்கும் அங்குள்ள ஒரு மாநில அரசுக்கும் இடைப்பட்ட விடயம்.

"ஒரு நாட்டின் மத்திய அரசை தாண்டி, அங்குள்ள மாநில அரசு ஒன்றுடன் இத்தகைய விடயங்கள் குறித்து பிறிதொரு நாட்டின் அரசுத் தலைவரான நாங்கள் பேசுவது பொருத்தமற்றது" - இப்படி பிரதமர் ரணில் எடுத்துக்கூறியதாகத் தெரியவருகிறது. (உ)

## கிரனேட் வீச்சில் இராணுவக் கப்டன் படுகாயம்!

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்த களியாட்ட நிகழ்ச்சி ஒன்றின் போது இடம்பெற்ற கிரனேட் தாக்குதல் சம்பவத்தில் இராணுவக் கப்டன் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு பத்து மணியளவில் நிகழ்வு இடம்பெற்ற மைதானத்துக்கு வெளியே இருந்து இரண்டு கிரனேட்டுகள் வீசப்பட்டன. அவை வெடித்துச் சிதறியதை அடுத்து அங்கு கூடி நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணமாக இருக்கலாம் என படையினர் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், புலிகள் இதனை வன்மையாக மறுத்துள்ளனர். (ம-4)

## தப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் விசு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரியப்படுத்தினார். கண்காணிப்புக் குழுவினர் கடற்படை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மீனவர்கள் படகுகளுடன் பாதுகாப்பாகத் தமது இடங்களுக்குத் திரும்ப நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதனையடுத்து விடுதலைப் புலிப் பிரமுகர்களான ரெஜி, சேனாதிராஜா ஆகியோர் மீனவர்களை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.


**தொடர்புகொள்ளவும்**

லொறிமூலம் கொழும்புக்கு வாழைக் குலை, வெங்காயம், புகையிலை, இறால், பழைய இரும்பு மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் சகலதும் குறைந்த கட்டணத்தில் அனுப்பலாம்.

*தொடர்புகளுக்கு:*

**ஈஸ்வரன் ரேடர்ஸ்,**

இல.69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-22033) T.P.No:021 - 2813

**இந்துநாகர்கம்**
**2004 A/L**
செவ்வாய் 3.15மணி 07.05.2002
ஆசிரியர்:
**என்.ரி.தரன்**
அனேக மாணவர்களின் வேண்டுதலுக்கு இணங்க ஆரம்பமாகிவிட்டது.
**யாழ் கல்வி நிலையம்**
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
(C-22035)

**தேவை**

சுத்தமாக எடுக்கப்பட்ட வேப்பம் பூ, சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட வேப்பம் பூ வடகம் என்பன தேவை. வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

**குணகாஸ் றேடர்ஸ்,**

இல. 432, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(3441) T.P.: 2354, 2719, 3135

**தேவை**

கொழும்பு கணனிக் கல்வி நிறுவனம் யாழ்நகரில் ஆரம்பிப்பதற்கு ஒரு வீடு தேவை.

தொடர்புகளுக்கு:-
விளம்பர இல.1505,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.
(3362)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.(பரமேஸ்வராச்சந்தி அருகே)

**இலவசக்கணனிப்பயிற்சி**

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேடகணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 08.05.2002 இற்குமுன் நேரில்

MCS


**ஓராண்டு நிறைவில் ஓயாத நினைவுகள்**

பிறப்பு 04 - 10 - 1937



இறப்பு 16 - 04 - 2001

அமரர்

**கந்தையா பாலசுப்பிரமணியம்**

*(ஸ்கூட்டர் பாலா மாஸ்டர்)*

விண் தொட்ட காலம் சென்று ஆண்டொன்று
மண் விட்டு நீர்தான் மறைந்து போனாலும்
மனம்விட்டு உங்கள் நினைவு மறையாது.
எங்கள் அப்பாவே,
எங்கள் துயர் தீர்க்க - மீண்டும் ஒரு பிறவி எடுத்து
நீங்கள் வாருங்கள் எங்களோடு வாழ்வதற்கு.

என்றும் தங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை.

*M.S.வீதி, கோண்டாவில்.* (3382)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.